2969
M 33134
ட

உ
கடவுள் துணை.

ஸ்ரீ ஷண்முகப்பிரிய ஜெயராம தீபிகை

என்னும்

# வைத்திய - ரத்தினம்

MAHARAJA SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY, THANJAVUR, TANJORE.
RECEIVED
30 JUN 1968

முதல் பதிப்பு.

இஃது
சப்ரிஜிஸ்தரார் M. ஜெயராமபிள்ளையால்இயற்றப்பட்டது

D. நம்மாழ்வார் பிள்ளையால்
பிரசுரம் செய்யப்பட்டது

குடியாத்தம் சுண்ணாம்புபேட்டை
பிரபாத் பிரஸ்ஸில் அச்சிடப்பட்டது.

காபிரைட் ரிஜிஸ்தர் செய்யப்பட்டது

1955

விலை ரூ. 0-12-0

கடவுள் துணை.

# ஷண்முகப்பிரிய ஜெயராம தீபிகை

என்னும்

# வைத்திய ரத்தினம்.

முதல் பாகம்

**முதல் பதிப்பு.**

இஃது

தென்னாற்காடு ஜில்லா வளவனூர்

சேர்மன் G. மாணிக்கம் பிள்ளை குமாரர்

**ரிஜிஸ்தரார் M. ஜெயராம பிள்ளையால்**

க சாதுக்களின் உபதேசப்படியும், ஏட்டுப்

பிரதிகளின் ஆராய்ச்சிப்படியும்

**Ms. No. 201 Revenue Department**

22-1-1953 உத்திரவுப்படியும் இயற்றப்பட்டு

**தேவஸ்தானம் D. நம்மாழ்வார் பிள்ளையால்**

பிரசுரம் செய்யப்பட்டு

குடியாத்தம் சுண்ணாம்புபேட்டை

K. M. கெஜராஜ் அவர்களது

பிரபாத் பிரஸ்ஸில் அச்சிடப்பட்டது.

ரிஜிஸ்தர்
பட்டது } 1955

விலை ரூ. ~~0-12-0~~

# நற்சாட்சி பத்திரங்கள்.

சப் ரிஜிஸ்தரார் ஸ்ரீ M. ஜெயராமபிள்ளையால் இயற்றப்பட்ட ஸ்ரீ ஷண்முகப்பிரிய ஜெயராம தீபிகை என்னும் வைத்திய ரத்தினம் முதற் பாகமும் மாந்திரீக ரத்தினம் இரண்டாம் பாகமும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் அத்தியாவசியமானவை. இவைகளால் அநேக பிணிகளையும் விஷ சிகிட்சைகளையும் வைத்திய உதவி இல்லாத இடங்களிலும் வைத்தியர்கள் உதவியின்றியே தீர்த்துக்கொள்ள மிக்க உபயோகமாயிருக்கும்.

வேலூர்
11-3-53

(Sd) S. Alagirisamy Chettiar
வடார்க்காடு ஜில்லா ரிஜிஸ்தரார்.

---

I know Sri. M. Jayarama Pillai Sub-Registrar Gudiyattam for the past about one year. He has Ayurvedic Medicines Prescribed by yoghis. He has prepard all the medicines of his own and they are harmless and tested by Experiensed Medical Men.

Gudiyattam
1-10-1953

V. VISVANATHAN
Tahsildar

# பொருள் அடக்கம்.


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | நாடி பரீக்ஷைகள் | 1 |
| 2 | எரிப்பு - புடம் - ஊதி - திட்டங்கள் | 5 |
| 3 | மருந்து அளவு - நிறை - மருந்து கெடாமல் இருக்கும் காலம் | 6 |
| 4 | நஞ்சு தின்ற பேருக்கு முறிவு | 7 |
| 5 | விஷங்களுக்கு | 8 |
| 6 | செந்தூரங்கள் சுண்ணங்கள் | 9 |
| 7 | பஸ்பங்கள் | 13 |
| 8 | பலவகைப்பட்ட மருந்துகள் | 21-44 |
| 9 | மாந்திரீக விஷயங்கள் | 54 |


## பிழை திருத்தங்கள்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம் |
|---|---|---|---|
| 7 | 1 | $1\frac{1}{16}$ | $\frac{1}{16}$ |
| 9 | 16 | கணுக்கடி | காணுக்கடி |
| 11 | 10 | லிங்கம் ஓரே | லிங்கம்பலம் 1 ஓரே |
| 12 | 15 | லிக்கம் பலம் 4 | உலாந்த லிங்கம் பலம் 4 |
| 13 | 23 | காற்ருல் | சாற்ருல் |
| 15 | 25 | பல் இருக்கும் | பல் இருகும் |
| 20 | 18 | கந்தகத்தை | நெல்லிகாய் கெந்தகத்தை |
| 24 | 27 | கிராம்பு $\frac{1}{2}$ | கிராம்பு பலம் $\frac{1}{2}$ |
| | | சிருநாகப்பூ பலம் $\frac{1}{2}$ | சிருநாகப்பூ பலம் $1\frac{1}{2}$ |
| 25 | 3 | $\frac{1}{2}$ சேர் | $\frac{1}{8}$ படி |
| 26 | 1 | ரேகம் (5) | ரோகம் (5) |

# முகவுரை.

**அன்பர்களே!**

நம் இந்து தேசத்தில் பழைய வைத்திய முறைகளும் விஷ பச்சிலை மூலிகைகளும் மாந்திரீக விஷயங்களும் ஒருவருக்கொருவர் சொல்லாமலே மறைந்து கொண்டே வருகின்றன.

இக்கெட்ட பழக்கத்தைப் போக்க ரூபில் பரிக்ஷித்துப்பார்த்து அனுபோகத்தில் வரும் பல மாந்திரீக விஷயமும் வைத்திய விஷயமும் இதில் அச்சிடப்பட்டிருக்கின்றன.

என் பிதா தென்னார்க்காடு ஜில்லா விழுப்புரம் தாலுக்கா வளவனூர் சேர்மென் மாணிக்கம் பிள்ளை என் தாய் நவநீதம்மாள் செய்த புண்ணிய வசத்தால் நான் சிறு வயதில் அவர்களோடு பல புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப் போன போது பல மகான்களை தரிசிக்க நேர்ந்தது- பிறகு உத்தியோக விஷயமாய் பல ஜில்லாக்களுக்கு மாற்றப்பட்டு மயிலம்-திருக்கோவலூர் -கலசப்பாக்கம்- குறிஞ்சிப்பாடி மண் மேல் குடி முதலிய ஊர்களில் வேலை பார்த்தபோது ஸ்ரீ முருகன் அருளால் பல யோகிகளை தெரிசிக்க நேர்ந்து அவர்களால் உபதேசிக்கப்பட்ட முறைப்படியும் பல புராதன ஏட்டுப் பிரதிகளின் ஆராய்ச்சி படியும் இதில் முதல் பாகத்தில் எழுதப்பட்ட வைத்திய விஷயமும் இரண்டாவது பாகத்தில் எழுதப்பட்ட மாந்திரீக விஷயமும் இப் புத்தகத்தில் அச்சிடப் பட்டிருக்கின்றன.

பல வைத்திய நூல்களில் எழுதப் பட்டிருக்கும் பஸ்பங்கள் செந்தூரங்கள் அவைகளில் சொல்லிய முறைப் படி செய்தால் கூடிவராமல் அநேகமாய் கெட்டு விடுகின்றன

ஆனல் இப்புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கும் ஒவ்வொரு முறையும் நேரில் செய்துப் பார்த்து வியாதியஸ்தர்களுக்கு ஷை மகான்களாலும் கொடுத்து பரீக்ஷித்துப் பார்த்து எல்லா மருந்துகளும் சீக்கிரம் கெட்டு விடுவதாலும் பஸ்ப செந்தூரங்கள் மட்டும் 600-500 வருஷங்களுக்கு கெடாமல் இருப்பதாலும் 3 வேளை அல்லது 3 நாட்களில் இவைகளால் குணப்படும் வியாதிகள் இதற மருந்துகளால் 3 மாதம் அல்லது 3 வருஷம் குணமாவதாலும் முக்கியமாய் இப்புத்தகத்தில் பஸ்பசெந்தூரங்களேயே விரிவாக எழுதப்பட்டுள்ளது.

இதில் சொல்லப்பட்ட விஷ சிகிச்சைகளும் நாடி சாஸ்திரங்களும் ரூபில் பரீக்ஷித்துப்பார்த்தவைகள். இதில் சொல்லப்பட்ட முறைகளை இப்புத்தகத்தை வாசிப்பவர்களே சுயமாய் செய்து சாப்பிடலாம். பாஷாண மருந்தாயிருந்தாலும் அதை 2 எரு உள்ள ஒரு சிறிய புடம் போட்டால் அது அமிர்தமாகிறது.

மாந்திரீக விஷயம் கெட்டது என்று யாவரும் உலகில் சொல்லுகிறார்கள். ஒருவருக்கு உபகாரம் செய்யும் மந்திரத்தின் எழுத்துக்களை மாறுதலாய், தப்பிதமாய், உச்சரித்தாலும் அவைகள் நல்லதையே செய்யும் கெடுதல் செய்யாது பிறருக்கு கெடுதலைச் செய்யும் மந்திரத்தின் எழுத்துக்களை சரியாக உச்சரித்தாலும் அவைகள் கெடுதல்கள் தான் செய்யும். ஆகையால் கெடுதல்கள் செய்யும் மந்திரங்களை கனவிலும் நினைக்கக்கூடாது இப்புத்தகத்தில் சொல்லியிருக்கும் மந்திரம் ஒவ்வொன்றும் உபகாரமான மந்திரம் நன்மையையே செய்யும்.

நம் காருண்ய சுதந்திர அரசாங்கத்தார். விடுத்த (G O. Ms 2803 - Public Services - C. Dated

23—6—1950) உத்திரவுப்படி இந்நூலை பிரசுரம் செய்ய் சர்க்கார் ஊழியனாகிய எனக்கு இந்த வாய்ப்பு கிடைத்தது இது போல் மற்ற சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் உத்தியோகஸ்தர்கள் அல்லாதார்களும் பல நூல்களின் உண்மைகளையும் இது வரையில் பிறருக்கு சொல்லாமல் மறை பொருளாக வைத்திருக்கும் விஷயங்களையும் உலக உபகாரமாக அச்சுப் போட்டு வினியோகப்படுத்து மாறு வணங்கி கேட்டுக்கொள்ளுகிறேன். இப்புத்தகம் G O.Ms No 201. REVENUE-DEPARTMENT-DATED 22-1-1953 உத்திரவுப்படி பிரசுரம் செய்யப்பட்டது.

இப் புத்தகத்தில் திருதங்கள் ஏதாவதிருந்தால் அவைகளை அன்புடன் ஏற்றுப் பிரசுரம் செய்யும் போது அடுத்த பதிப்பில் திருத்தி அமைக்கப்படும் மாந்திரீக விஷயங்களும் சக்கரங்களும் என் குரு உபதேசப்படியும் என் அனுபவப் படியும் எழுதப்பட்டுள்ளன. சோதிடம்-சர சாஸ்திரம் — ரேகைசாஸ்திரம் — ஞானசாஸ்திரம் (பல்வித யோகங்களடங்கியவை) முதலிய நூல்கள் இனிவெளிவரும்

சப்ரிஜிஸ்தரார் ஆபீஸ் புதுப்பேட்டை (Via) பண்ருட்டி
தென்னார்க்காடுஜில்லா
22—9—52

அன்பன்
**M. ஜெயராம் பிள்ளை**
சப்ரிஜிஸ்தரார்

கடவுள் துணை.

# நாடிப் பரீக்ஷிக்கும் விதம்.

கையின் பெருவிரல்பக்கமாய் ஓடும்நாடியை மணிக்கட்டுக்கு ஒரு அங்குலம் கீழாக மூன்று விரல்களால் (ஆள் காட்டி விரல்நடுவிரல் மோதிரவிரல்) அழுத்தியும்தளர்த்தியும்சம மாகவும் மாறி மாறி பரீக்ஷிக்கவும். நோயில்லாத சாதா ரண மனிதர்களுக்கு வாதம் 1. பித்தம் ½ சிலேத்துமம் ¼ ஆக நடக்கும். முதல் ஆள் காட்டி விரலால் பார்ப்பது வாதம். நடு விரலால் பார்ப்பது பித்தம் மோதிர விரலால் பார்ப்பது சிலேத்துமம்.

# பலவித வியாதிகளுக்கு நாடி நடை.

**வாத ஜுரம்:**—வாதம் முன்னேக்கி பேசும். பித்தம் சேத்துமம் சமமாய்ப்பேசும். வாய் நல்ல தண்ணீர் போல் இருக்கும்.

**பித்த ஜுரம்:**—பித்த நாடி 1¼ வாதம் ¾ சிலேத்துமம் ½ பேசும். வாய் கசக்கும். தலை கிரு கிருக்கும். நினைப்பு மாறும். வெறி பிடிக்கும் (பித்த ஜுரம் அதிக மானல்)

**சிலேத்தும ஜுரம்:**—சிலேத்துமம் 1. பித்தம் ¾ வாதம் ½ பேசும். கபம் உண்டாகும். சிலருக்கு கால் வீங்கும். காலில் சிலு சிலுப்பு உண்டாகும். வாய் குழரும்.

**சீதபேதி:**—சேத்துமம் பட படப்பில்லாமல் அதிகமாய்ப் பேசும். வாதம் கொஞ்சம் அடங்கும்.

**வயிர் போக்கு:**—சிலேத்துமம் அதிகமாய் திறந்து பேசும். பித்தம் ¼ அல்லது ½பேசும். வாதம்கிணற்றில் விழுந்தவன் செயல் போல் தோன்றியும் தோன்றாமலும் இருக்கும்.

**கர்ப்பம்:**—சிலேத்துமம் மட்டுப் பட்டு நாடி மூன்றும் சற்றுக் கீழ் நோக்கி (அதாவது முழங்கை பக்கமாக) பேசும் நாடி மூன்றும் சுகமாய்ப் பேசும். ஒன்று பட்டால் போல் இருக்கும்.

**பசி:**—வாதபித்தம் அதிகமாய் மேல் நோக்கி அல்லது முன்னோக்கிப் பேசும்.

**மலச்சிக்கல்:**—சிலேத்துமம் அடைபடும் அதாவது பேசாது.

## குழந்தைகளுக்கு பச்சைவாதம் (மாந்தம்)

சிறு குழந்தைகளுக்குநாடி 3ம் முன்னோக்கி படபடப்பாய் பேசினால் பச்சை வாதம். பச்சை வாதம் அதிகப்பட்டால் மாந்தம் முதிர்ந்தது.

**தலைவலி:**—பித்தம் வாதம் அதிகமாய் முன்னோக்கிப் பேசும்

**அஸ்தி ஜுரம்:**—மூன்று நாடிகளும்நடையில் $\frac{1}{8}$ அடங்கும்.

**ஜன்னி.**—நாடி 3ம் அளவுக்கு மீறி அதிர்ந்து பேசும். அப்படியானால் ஜன்னி. அப்படி அதிர்ந்து பேசுவதில் மோட்டார் பைக் போல படபட வென்று பேசினால் பயந்தது. ஜன்னி அல்ல. பயந்ததற்கு தலை பளுவு, வாய் பிதற்றல், அசாத்திய டிக்கிரி ஜுரம்.

**விஷம்:**—ஷை அதிரும் வகையில் — வில் உதவாக மேல் நோக்கி ஒரு அக்கினி சம்பந்தமாக நாடியில் ஒரு திகில் தோன்றி பேசுமானால் அது விஷம்.

**பயம்—மனக்கிலேசம்—பிதற்றல்:-**

ஷை விதமில்லாமல் மறுபடி வேறு விதமாக மூன்று நாடி அதிர்ந்து தோன்றும்.-

**நீர் ஒழுக்கு—காசம்—மேகம்—மூலம்—பௌத்திரம்—**

## வெள்ளை-வெட்டை:-

வாதம் அடங்கும். பித்தம் சிலேத்துமம் அதிகமாய்ப் பேசும்.

## பிரசவித்த ஸ்திரீகளுக்கு அழுக்கிருந்தால்:-

பித்தம்சிலேத்துமம் அடங்கிவாதம் ½ மாத்திரை இருக்கும்

## பிரசவித்த ஸ்திரீக்கு சீழ் இருந்தால்:-

வாதம் கனத்துப் பேசும்.

## காக்கை வலி முயல் வலி குமர கண்ட வலி:-

குருநாடியை பரீக்ஷிக்கும்போது 10 நிமிஷம் 3 நாடியையும் அழுத்திப்பார்க்கில் உத்தமம். அப்போதுஒரு எலியோடு ஒன்று சண்டை இடுவது போலவும் கோணலாகவும் ஒரு தரம் 1½—½—¼ பாகநாடிகள் ஒவ்வொன்றும் மாறி மாறிப் பேசும்.

**குரு நாடி:**—ஆயுள் பாகம் தெரிந்து கொள்ள வேண்டில் மூன்று நாடிகளையும் ஷை 3 விரல்களையும் கொண்டு அழுத்தி மனதை ஊன்றிப் பார்க்க 3 நாடியும் ஒருமித்து ஒரே நாடியாகப்பேசும் இதனை குருநாடி என்பார் சிலேத்துமம்பேசுமிடத்தில் **குரு நாடி** பேசினால் அற்ப ஆயுள். பித்தநாடி பேசுமிடத்தில் பேசினால் மத்திம ஆயுள். வாதம் பேசுமிடத்தில் பேசினால் பூரண ஆயுள்.

## நாடி நடைகள்.

**வாதம்:**—பாம்பு - அட்டை - தவளை - ஓணன் இவைகளின் நடை.

**பித்தம்:**—தாரா - மயில் - அன்னம் இவைகளின் நடை.

**சிலேத்துமம்:**—கோழி - ஊர்க்குருவி இவைகளின் நடை வாதம்-பித்தம்-சிலேத்துமம் ஆக மூன்று நாடிகளுக்கும் ஒவ்வொன்றுக்கும் நான்கு பிரிவு உண்டு.

**வாதம்**:-(1) வாதம் முன்னோக்கி நடந்தால் **வெட்டை**
(2) பின்னோக்கி நடந்தால் **பித்த வாயு**
(3) வலப் பக்கமாக நடந்தால் **சூலை**
(4) இடப் பக்கமாக நடந்தால் **குன்மம்**

**பித்தம்**:-(1) பித்தம் முன்னோக்கி நடந்தால் **மேக வாயு**
(2) பின்னோக்கி நடந்தால் **"மகா காசம்"**
(3) வலப் பக்கம் நடந்தால் **சூலை**
(4) இடது பக்கம் நடந்தால் **குன்மம்**

**சிலேத்துமம்**:-(1) முன்னோக்கி நடந்தால் **பித்தம்**
(2) பின்னோக்கிநடந்தால்**சிலேத்மரோகம்**
(3) வலது பக்கம் நடந்தால் **காசம்**
(4) இடது பக்கம் நடந்தல் **மரணம்**

ஆண்களுக்கு வலது கையும் பெண்களுக்கு இடது கையும் பார்ப்பது வழக்கம். இரண்டு கைகளிலும் நாடி பார்ப்பது நல்லது.

## நாடி தொந்திப்பு (சேருதல்)

**வாத பித்தம்**:-பாரம் சுமந்து நடப்பது போல நடக்கும்

**வாத சிலேத்துமம்**:- முறிந்த அரணைவால் துடிப்பது போல் நடக்கும் (வாதத்தில் சிலேத்துமம் சேர்ந்தால்)

**பித்வாதம்**:-வீணை அடிப்பது போல நடக்கும்.

**பித்த சிலேத்துமம்**:-பிள்ளை தொட்டில் ஆடுவது போல் நடக்கும்.

**சிலேத்தும வாதம்**:-புணர்ச்சிபோல் நடக்கும்.

**சிலேத்தும பித்தம்**:- வண்டி சக்கரம் சுழல்வதுபோல் நடக்கும்.

## நாடிகளின் தொந்திப்பினால் உண்டாகும் நோய்கள்.

**வாத பித்த நாடி சேர்ந்தால்**:- வயிற்று வலி – தாகம் – உப்பிசம் உண்டாகி பாண்டு – காமாலை – மகோதரம் – நீராம்பல் முதலிய வியாதிகள் வரும்.

**வாத சிலேத்தும நாடிதொந்திப்பு**:- தலைவலி - கை கால் திமிர் – வயிற்றுப் பொருமல் உண்டாகி ஜன்னி – மயக்கம் சோபை – பாண்டு மூர்ச்சை முதலிய நோய்கள் வரும்.

**பித்தவாத நாடி தொந்திப்பு:-** தேகவலி—எரிச்சல்—நாக்கு நெஞ்சி வரட்சி உண்டாகி பீநிசம்—மூலம்-வலிப்பு-பவுத்திரம்—அரையாப்பு முதலிய வியாதிகள் வரும்.

**பித்தசிலேத்தும நாடிதொந்திப்பு:-** வயிறு உப்பல்-பிதற்றல் கண் எரிச்சல்-கண்மஞ்சள் உண்டாகி தலைசுற்றல்-வயிற்று வலி-பிடரிவலி முதலிய வியாதிகள் வரும்.

**சிலேத்தும வாத நாடி:-** கபமதிகம்-தாகம் உண்டாகிஜன்னி தலைவலி முதலிய ரோகங்கள் உண்டாகும்.

**சிலேத்தும பித்த நாடி:-** மண்டையிடி-காது கோளாமை-நாக்கு இனிப்பு உண்டாகி ஜன்னி முதலிய வியாதிகள் உண்டாகும்

**வாத பித்த சிலேத்தும நாடிகள்:-** மூன்றும் சேர்ந்தால் படபட வென்று நடக்கும்—ஜன்னி உண்டாகும்.

**அதிவாத நாடி:-** வாதம் அதிகமாய் நடந்தால் தேகநோய்—தேகபதறல்—அன்னத்து வேஷம் ஏற்பட்டு வாதரோகங்கள் வரும்.

**அதிபித்த நாடி:-** பித்த நாடி அதிகமாய் நடந்தால் கிறுகிறுப்பு—பிதற்றல்—இளைப்பு—தேகம் உலர்ந்து வீங்கி பித்த ரோகங்கள் உண்டாகும்.

**அதிசிலேத்தும நாடி:-** சிலேத்தும நாடி அதிகமாய் நடந்தால் ஜன்னி உண்டாகி உயிர் பிரியும்.

### எரிப்புத்திட்டம்

| | |
|---|---|
| தீபாக்கினி | 1 விறகு (2 விரல் கனம்). |
| கம்லாக்கினி | 2 விறகு (2 விரல் கனம்). |
| காடாக்கினி | 3 விறகு (2 விரல் கனம்). |

### புடத்திட்டம்

| | |
|---|---|
| காடைபுடம் 1-2 எரு | வராகபுடம் 50 எரு |
| கவுதாரிபுடம் 3 எரு | கெஜப்புடம் 100 எரு |
| குக்குடம் புடம் அல்லது | கனப்புடம் 1000 எரு |
| கோழிபுடம் 10 எரு | |

ஒவ்வொரு எருவும் 1 பலம் எடையுள்ளது.

## ஊதுத்திட்டம்

| | |
|---|---|
| கண்ணம் | 1 துருத்தி |
| உருக்கு | 2 துருத்தி |
| சத்து | 4 துருத்தி |

இப்புத்தகத்தில் ஒருதடவைக்கு கொடுக்குப்படி சொல்லப்பட்ட மருந்துகளை கீழ்க்கண்ட வயதுக்கு தக்கப்படி பாகித்து கொடுக்கவும்.

| முதல் | வரையில் | ஒரு தடவை கொடுக்கும் அளவின் பாகம் |
|---|---|---|
| பிறப்பு | 3 மாதம் | 16ல் ஒரு பகாம் $\frac{1}{16}$ |
| 4 மாதம் | 1 வருஷம் | 12ல் ஒரு பாகம் $\frac{1}{12}$ |
| 1 வருஷம் | 2 வருஷம் | 8ல் ஒரு பாகம் $\frac{1}{8}$ |
| 2 வருஷம் | 3 வருஷம் | 6ல் ஒரு பாகம் $\frac{1}{6}$ |
| 3 வருஷம் | 4 வருஷம் | 4ல் ஒரு பாகம் $\frac{1}{4}$ |
| 4 வருஷம் | 7 வருஷம் | 3ல் ஒரு பாகம் $\frac{1}{3}$ |
| 7 வருஷம் | 14 வருஷம் | 2ல் ஒரு பாகம் $\frac{1}{2}$ |
| 14 வருஷம் | 20 வருஷம் | 3ல் 2 பாகம் $\frac{2}{3}$ |
| 20 வருஷம் | 60 வருஷம் | பூரண அளவு |

## மருந்துகள் கெடாமல் இருக்கும் காலம்

| | |
|---|---|
| பஸ்பங்கள் 600 வருஷம் | இலேபனமாத்திரைகள் 2 வருஷம் |
| செந்தூரங்கள் 500 வருஷம் | மெழுகுகள் 1 வருஷம் |
| கட்டு வகைகள் 100 வருஷம் | இரசாயனங்கள் 1 வருஷம் |
| தாதுவார்கமாத்திரைகள் 100 | பாவனங்கள் 1 வருஷம் |
| திராவகங்கள் 50 வருஷம் | தாப சூரணங்கள் 1 வருஷம் |
| தாவரவர்க்க மாத்திரைகள் 2 வருடம் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தைலங்கள் | 9 | மாதம் | கிருதங்கள் | 2 | மாதம் |
| பிளாஸ்த்திரிகள் | 8 | ,, | ஷர்பத்துகள் | 1 | ,, |
| லேகியங்கள் | 6 | ,, | ஹல்வாக்கள் | $\frac{1}{2}$ | ,, |
| வடகங்கள் | 3 | ,, | | | |

## மருந்துகளின் நிறை

| | |
|---|---|
| 4 நெல் எடை—1 குன்றிமணி | 2 குன்றிமணி 1 $\frac{1}{16}$ வாரனெடை |
| $3\frac{1}{2}$ குன்றிமணி—1 பணஎடை | 32 குன்றிமணி-1 வாரகனெடை |
| 9 பணஎடை-1 வாராகனெடை | 10 வராகனெடை - 1 பலம் (3 ரூபா எடை) |

## நஞ்சு தின்ற பேருக்கு முறிவு:—

**நஞ்சுக்கு:**— எட்டிக்கொழுந்தும் பட்டையும் கொடுக்கவும்

**அலரிக்கு:**—காடி, கடுக்காய், விளாமிச்சைவேர் எலுமிச்சம் பழச்சாறு கலந்து கொடுக்கவும்.

**சுண்ணும்புக்கு:**—மஞ்சள் கொடுக்கவும்.

**கள்ளிப்பாலுக்கு:**—ஆவாரம்பட்டை காடியில் கொடுக்கவும்

**அலரிக்கு:**—நெய்யும் தேனும் சேர்த்து கொடுக்கவும்.

**எருக்கம்பாலுக்கு:**—எலுமிச்சம் வேர் அரைத்துக் காடியில் கலக்கிக் கொடுக்கவும்.

**எருக்கிலேக்கு:**-வெல்லமும்எள்ளும்சேர்த்துக்கொடுக்கவும்

**கழுதைப்பூண்டுக்கு:**—சங்கம் பழச்சாறு கொடுக்கவும்.

**பெலாப்பழத்துக்கு:**—அதன் கொட்டை

**அலரிஎண்ணெய்க்கு:**—கடுக்காய், மஞ்சள், தண்ணீர் விட்டான் கிழங்கு சுக்கு, இவைகளே அரைத்து வெந்நீரில் கொடுக்கவும்.

**சேங்கொட்டை:**—முருங்கைப்பூ இடித்து தண்ணீரில் கொடுக்கவும். தேங்காய் உள்ளுக்குக் கொடுக்கவும்.

**எட்டிக்கொட்டை:**—அவுரி இலே அரைத்துக் கொடுக்கவும்

**பச்சைநாபிக்கு:**—சிறுகீரை வேக வைத்து கொடுக்கவும்.

**பாஷாணம்:**—பருத்திக் கொட்டையை பசும் பாலில் வேவித்து பாலே கொடுக்கவும்.

**ஊமத்தங்காய்க்கு:**—சீரகத்தை எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்துக் கொடுக்கவும்.

## விஷங்களுக்கு

**நாய் கடிக்கு:—** நாயுருவிச்சார் பலம் 1 நல்லெண்ணெய் பலம் 1 சேர்த்து காலையில் வெரும் வயிற்றில் 3 நாள் கொடுக்கவும். நாட்பட்ட கடிகளுக்கு 5 அல்லது 7 நாள் கொடுக்கவும். உப்பில்லாப் பத்தியம், மருந்து சாப்பிட்டு முடிந்தபிறகு (4-ம் நாள் 6-ம் நாள் 8-ம் நாள்) சுட்டப்புளி வறுத்த உப்பு சேர்த்து 3 நாள் சாப்பிட்டு மறுநாள் ஓமம் அரைத்து தேய்த்து ஸ்நானம் செய்யவும். பத்தியம் முறி வாகும். பிறகு புளிஉப்பு சேர்க்கலாம் எண்ணெய் ஸ்நானம் செய்யலாம். எல்லா விஷக்கடிக்கும் பத்தியம் இவவிதம்.

**பூரான் கடிக்கு:—** தும்பைச் சாறு 1 பலம் நல்லெண்ணெ ல் 1 பலம் சேர்த்து காலையில் வெறும் வயிற்றில் 3 நாள் கொடுக்கவும்.

**எலிகடிக்கு பெருச்சாளிகடிக்கு:—** முருங்கை பட்டைச் சாறு 1 பலம் நல்லெண்ணெய் 1 பலம் சேர்த்து காலையில் வெரும் வயிற்றில் 3-நாள் கொடுக்கவும்.

**பூனைக்கடிக்கு:—** துளசிச் சாறு 1 பலம் நல்லெண்ணெய் 1 பலம் சேர்த்து 3 நாள் காலையில் வெறும் வயிற்றில் கொடுக்கவும்.

**நண்டு வாகள்ளி அல்லது நண்டு தெரக்கால்:—** நெத்துத் தேங்காய் பால் 2 பலம் கொடுக்கவும்

**தேள் கடிக்கு:—** பொட்டாஷ்யம்பர் மாங்நேட் 1 அரிசி எடை (Potassium Per manganate) டார்டாரிக் ஆசிட் 1 அரிசி எடை (Tartaric acid) பொரித்த படிகாரத்தூள் 1 அரிசி எடை இவைகளை தேள் கொட்டிய வாயில் வைத்து கொஞ்சம் (ஒருசொட்டு) ஜலம் ஊற்றினால் பொங்கி சுருக் கென்றவுடன் விஷம் இறங்கும் கருநாபி எருக்கம் பாலில் ஊற வைத்து வெய்யிலிலுலர்த்தி கடிவாயில் உரைத்துப் போடவும். விஷம் இறங்கும். வேலிப் பருத்திச் சார் 1 பலம் கொடுக்கலாம்.

**இரத்த மண்டலி விஷக்கடிக்கு:—** யானை வணங்கி இலையை அரைத்து பாக்களவு ஜலத்தில் கரைத்துக் கொடுக்கக் குணமாகும்.

**நல்ல பாம்பு விஷக்கடிக்கு:—**(1) நஞ்சனுப்பான் நஞ்சு முரிச்சான் இலை 2 பிடி அல்லது $\frac{1}{16}$ வீசம் சேர் சாறு கொடுக்க விஷம் உடனே தீரும்.

(2) ஆதிசேஷ விஷகர மாத்திரை கொடுக்க தீரும். ஷை மாத்திரை செய்யும் விதம்.—கோடகசாலை இலை பிடி 2 எருக்கம் பழுப்பு பிடி 2. மிளகு பலம் 1. இவைகளை கல்வத்திலிட்டு மை போல் அரைத்து சுண்டக்காய் அளவாக மாத்திரைகளாக்கி நிழலில் உலர்த்தி ஒரு மாத்திரை 1-2-மணிக்கு ஒரு தடவை வக் கொடுக்கவும் நல்ல பாம்பு விஷக்கடி—பூரான்— ஜலமண்டலி முதலியவைகளின் விஷக்கடிகள் தீரும். எலி, தேள் விஷக்கடிகளுக்கு இதை கொடுக்கக் கூடாது.

**கணுக்கடி—பூச்சி கடிகளுக்கு:—** தும்பைச் சாறு 1 பலம் நல்லெண்ணெப் 1 பலம் சேர்த்து காலையில் வெரும் வயிற்றில் 3-நாள் கொடுக்கவும்.

**குறிப்பு:—**12-வயதுக்குள்ள குழந்தைகளுக்கு $\frac{1}{2}$ பலம் நல்லெண்ணெய் $\frac{1}{2}$ பலம் சாறு சேர்த்து கொடுக்கவும் 3-வயதுக்குள்ள குழந்தைகளுக்கு $\frac{1}{4}$ பலம் சாறு $\frac{1}{4}$ பலம் நல்லெண்ணெய் சேர்த்துக் கொடுக்கவும்.

## செந்தூரங்கள்.

**லிங்கச் செந்தூரம்:—** உலாந்த லிங்கம் ஒரு கட்டியாய் ஒரு பலம் வாங்கி அதை 10-நாள் முலைப்பாலில் ஊற வைத்து எடுத்து ஜலம்விட்டு அலம்பி அதைஒருஎலுமிச்சங் காயளவு சித்திர மூலவேர் (கொடி வேலிவேர்) பட்டையை அறைத்த சாந்துக்குள் வைத்து சந்து இல்லாமல் ஒன்றோ

டொன்று பொருந்தும்படியான இரண்டு சூளை போட்ட மண் அகலுக்குள் ஷை சாந்தை வைத்து ஷை அகல்கள் பொருந்தியிருக்கும் சந்துக்கு களிமண்ணும் புத்துமண்ணும் சேர்த்து அரைத்து தடவிய ஏழு துணிகளை ஒன்றின் மேல் ஒன்று வைத்து சீலை செய்து (ஒரு சீலை ஒட்டிய பிறகு மற்றொரு சீலையை வாய்புறம் சுற்றிஷை அகல்களின் வாய்ப்புறத்தில் ஒட்டவேண்டும்.) சீலை மண் காய்ந்த பிறகு ஷை அகல்களை ஏழு (எரு மூட்டை) எருவில் வைத்து புடமிடவும் புடம் ஆரிய பிறகு சீலை செய்த மண்ணை சுரண்டி விட்டு உள்ளிருக்கும் லிங்கக் கட்டியை எடுத்து கல்வத்தில் 1-மணி நேரம் அரைத்து, செந்தூரத்தை எடுத்து கார்க்கு போட்ட சீசாவில் வைத்துக்கொள்ளவும் வாய் பிடிக்காது.

ஜுரங்களுக்கு ஒரு அரிசி அளவு எடுத்து தேனில் காலை மாலை 3 அல்லது 5 வேளை கொடுத்தால் குணமாகும். ஜன்னிக்கு தேனில் ஷை அளவுப்படி அல்லது 2-3 அரிசி எடை நோய்க்குத் தக்கபடி கொடுத்து உடனே சித்திர மூலவேர் $\frac{1}{4}$ அல்லது $\frac{1}{8}$ பலம் போட்டு காய்ச்சிய கஷாயம் கொடுக்கலாம். வாய்வுக்கு 1 அல்லது 2 அரிசி எடை அமுக்கிறாங்கிழங்கு—சுக்கு – பரங்கிப்பட்டை–கோஷ்டம் வெள்ளை காக்கட்டான் வேர் சேர்ந்த சூரணம் ($\frac{1}{4}$ அணா துட்டு அளவு) இதில் சேர்த்து கொடுக்கலாம்.

**பத்தியம்:**—கத்திரிபிஞ்சு-முருங்கைபிஞ்சு—பொறி குழம்பு இரசம் சாதம்—வாய்வு—சீதள பதார்த்தம் நீக்கவும்.

**லிங்க வெள்ளை:**—உலாந்த லிங்கம் ஒரே கட்டியாய் 1 அல்லது $\frac{1}{2}$ பலம் வாங்கி அதை முலைப்பாலில் 10-நாள் ஊறவைத்து எடுத்து சுத்தம் செய்து கொள்ள வேண்டும் ஷை முலைப்பாலில் 2 அல்லது 3 நெல் ஊற வைக்கு முன் போடவேண்டும். சிவகரந்தை இலை ஒரு எலுமிச்சங்

காயளவு அரைத்து அதில் ஷை லிங்கக் கட்டியை வைத்து மூடி முன்பு லிங்கச்செந்தூரத்தில் சொல்லிய முறைப்படி ஓட்டிவிட்டு சீலை செய்து 7 அல்லது 10 எருவில் புடமிட வெண்மையான பஸ்பமாகும். வாய் பிடிக்காது. ஜன்னி வாய்வு முதலிய பலத்த ரோகங்களுக்கும் கொடுக்கலாம். பத்தியம் அனுமானம் லிங்கசெந்தூரத்தில் சொல்லியபடி.

**காலரா செந்தூரம்:**—ரேக் தாளகம் $\frac{1}{2}$ பலம் ஒரே கட்டியாய் வாங்கி அதை 7 தடவை கல் சுண்ணும்பில் வைத்து கழுதை அமரியால் தாளித்து சுத்தம் செய்து கொள்ள வேண்டும். உலர்ந்த லிங்கம் ஒரே கட்டியாய் வாங்கி முலைப் பாலில் ஊற வைத்து சுத்தம் செய்து கொள்ள வேண்டும். வீரம் பலம் $\frac{1}{2}$ ஒரே கட்டியாய் வாங்கி ஒரு மணி நேரம் எருக்கம் பாலில் ஊற வைத்து எடுத்து சுத்தஜலத்தில் கழுவி எடுத்துக் கொள்ளவும். பிறகு வீரம் தாளகம் லிங்கம் இவைகளை சேர்த்து கல்வதில் அறைத்து ஷை தூளை ஒரு செங்கல்லை குடைந்து அதில் போட்டு பிறகு ஷை கல்லுக்கு பொறுத்தமான வேறொரு கல்லால் மூடி இரு கற்களையும் கம்பியால் சுற்றி கட்டி, கற்கள் வாய் புறத்துக்கு 5 சீலை செய்து காய வைத்து 10 எருவில் புடம் போடவும். மருந்து வாசனை வந்தவுடன் புடத்தை கலைத்து மருந்தை எடுத்து ஆற விடவும்.

காலரா கண்டவர்களுக்கு 2 முதல் 4 அரிசி எடை மருந்தை தேனில்குழைத்து முலைப்பாலில் கலந்து 3-மணி நேரத்துக்கு ஒரு தடவை கொடுக்கவும் வியாதி பலத்திருந்தால் 2 அல்லது 1 மணிக்கொரு தடவை கொடுக்கலாம். 10 வயது குழந்தைகளுக்கு பாதி அளவு.

**பத்தியம்:**—நெல் பொரி—கஞ்சி—பார்லி முழுசாகப் போட்டு காய்ச்சின வடிகட்டிய கஞ்சி முதலிய லேசானை ஆகாரம் கொடுக்கலாம்.

**பூரணி செந்தூரம்:—** பூங்காவி பலம் 2 படிகாரம் பலம் 2 இவ் விரண்டும் சேர்த்து கல்வத்தில் 1 சாமம் அரைத்து காலை மாலை 2 அரிசி எடை நெய் அல்லது வெண்ணெயில் சாப்பிட பெரும்பாடு,வெள்ளை, ரத்தகாசம்,மேகவெட்டை உஷ்ணவாயு—நாவரட்சி தீரும்.

**பத்தியம்:—** கடுகு நல்லெண்ணெய் நீக்க.

**அன்னபேதி செந்தூரம்:-** 2பலம்அன்னபேதியைநீராகாரத்தில் 2-மணி ஊற வைத்து எடுத்துக் கொண்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு அன்னபேதியை (ஒரு சாமம்) அரைத்து பில்லை தட்டி காய வைத்து ஓட்டி லிட்டு சீலை 3 செய்து 10 எருவில் புடமிட செந்தூரம் ஆகும். தேனில் 2 அரிசி எடை சாப்பிட பசி தீவனம் உண்டாகும். வாய்வு மார்பு நோய் தீரும். வாய்வு பதார்த்தம் நீக்கவும்

**சண்ட மாருத செந்தூரம்:-** வீரம் பலம் 1 கந்தகம்பலம் 1 (நெல்லிக்காய் கந்தகம்) பூரம் பலம் 2 லிங்கம் பலம் 4. இவைகளை சுத்தம் செய்து கோழி முட்டையின் வெள்ளை கருவால் 2 சாமம் அரைத்து பில்லை தட்டி உலர்த்தி ஒரு மண் கலயத்தில் 2 படி ஜலம்விட்டுஅதில் ஷை பில்லைகளைப் போட்டு ஜலம் வற்றும் வரையில் காய்ச்சி எடுத்து கல் வத்திலிட்டு ஒரு மணி நேரம் அரைத்து கல் கார்க்கு சீசாவில் வைக்கவும். வாய்பிடிக்காது. பனை வெல்லத்தில் 1 முதல் 2 அரிசி எடை கொடுக்க ஜன்னி—வாதம்—கண்ட மாலை—பவுத்திரம் தீரும். கொடிவேலி வேர்பட்டை குங்கு மப்பூ (வகைக்கு ½ குண்டு மணி எடை) முலைப்பால் இவை களை சேர்த்து அரைத்து அதில் கொடுக்க உதிரச்சிக்கல் தீரும். தேனும் கோழிமுட்டை தயிலமும் அரையணு அளவு சேர்ந்து அதில் கொடுக்கக் குழந்தைள் கட்டு மாந்தம்—முசல் வலிப்பு தீரும்.

**பத்தியம்:**—பால் நீங்கலாக கருவங்க பஸ்பத்துக்கு சொல்லியபடியே

**காளமேக நாராயண செந்தூரம்:**—ரசம் வராகன் எடை 1 தாளகம் வராகன் எடை 6. கெந்தி வராகன் எடை 1 லிங்கம் வராகன் எடை 1 இவை 4-ம் கல்வத்திலிட்டு சோத்துக்கத்தாழை சார்விட்டு 1 சாமம்பழச்சாற்றில்ஒரு சாமம் அரைத்து வில்லை தட்டி காய வைத்து மேலோடு மூடி சீலை மண் 3 செய்து 5 எருவில் புடமிட செந்தூரம் ஆகும்!

**அனுபானம்:**—நெய்-தேன் வெண்ணெய் இவைகளில் பண எடை கொடுக்க தந்தி மேகம் மது மேகம் கண்ட மாலை. வயிற்றுவலி நீங்கும். உப்பு இல்லா பத்தியம்.

**வெண்காரச் செந்தூரம்:**—வெண்காரம் பலம் 2. நுணுப் பட்டை சாறு விட்டு 2 நாழிகை அரைத்து பில்லை தட்டி வெய்யிலில் உலர்த்தி ஓட்டில் வைத்து 5 சீலை செய்து 10 எருவில் புடம் போட செந்தூரம் ஆகும். இவ்விதம் 5 முறை புடம் போடவும். நீர்க்கோவை நீர்கட்டுக்கு 2 அரிசி எடை நெய் அல்லது வெண்ணெயில் கொடுக்கவும். பிறகு சிறுக் கீரை சமூலம் கஷாயம் போட்டு 1/16 படி கொடுக்கவும் வாய்வு பதார்த்தம் நீக்கவும்.

### வயிற்று வலிக்கு வெடி உப்பு சுண்ணம்

வெடி உப்பு பலம் 1. சோடா உப்பு பலம் 1 இரண்டையும் கல்வத்திலிட்டு பிரண்டைச் சாற்றால் 4 சாமம் அரைத்து வில்லை தட்டி காய வைத்து ஓடு மூடி சிலை 7 செய்து 50 எருவில் புடமிட சுண்ணமாகும் அரையணு துட்டு அளவு பொடியை வெந்நீரில் கலக்கி வெரும் வயிற்றில் காலை மாலை கொடுக்க்வும் பத்தியம்–பித்தவாய்வு பதார்த்தம் நீக்கவும்

### பஸ்பங்கள் — கொடிப்பவள பஸ்பம்

கொடிப்பவளம் பலம் 2. எலுமிச்சம் பழசசாற்றில் 3 நாள்

ஊற வைத்து எடுத்து சுத்த ஜலத்தில் கழுவி எடுத்து 1 நாள் வெய்யிலில் காய வைத்துப் பிறகு இலந்தை இலையை ஒரு தேங்காய் பிரமாணம் அரைத்துக் கொண்டு அதில் ஷை பவழத்தைப் புதைத்து சீலை மண் 3 செய்து ஓட்டில் வைக்காமல் 100 எருவில் புடமிட பஸ்பமாகும்

**அனுபானம்:**—நெய் அல்லது பசு வெண்ணெயில் காலை மாலை 2 அல்லது 3 அரிசி எடை கொடுக்கலாம்.

**தீரும் வியாதிகள்:**—உஷ்ணம்—நீர்க்கட்டு—நீராம்பல்—சோகை—கபம் இரும்பல்—ஆரம்ப க்ஷயம்-பித்த காசம் நீர்கடுப்பு-முதலியன குணமாகும் சீதளபதார்த்தம்நீக்கவும்

## கற்பூர சிலாசத்து பஸ்பம்

கற்பூர சிலாசத்து ஒரு பலம் ஒரே கட்டியாய் வாங்கி எலுமிச்சம் பழச்சாற்றில் ஒரு நாள் ஊறவைத்து கோவை இலையை ஒரு தேங்காய் பிரமாணம் அரைத்து அதற்குள் ஷை கட்டியை வைத்து சீலை மண் 3 செய்து (ஓட்டில் வைக்காமல்) 100 எருவில் புடமிட பஸ்பமாகும் ஷை கட்டியை எடுத்து கல்வத்திலரைத்து கல்கார்க்கு சீசாவில் வைக்கவும்

பசுவின் நெய்யில் கொடுக்க-நீர்கடுப்பு-தேகஎரிச்சல்-பித்த வெட்டை தீரும். இத்துடன் பொறித்த வெங்காரத்தை 2 அரிசி எடை சேர்த்துக் கொடுக்க நீர் அடைப்பு-கல் அடைப்பு-சதை அடைப்பு-நீர் எரிச்சல் முதலியன தீரும் உஷ்ண பதார்த்தம் நீக்கவும்.

## நாக பஸ்பம்

உக்கா நாகம் 2 பலம் வாங்கி அதை ஆலைக் கரண்டியில் உருக்கி 10 தடவை இலுப்பெண்ணெயில் ஊற்றி சுத்தம் செய்து கொண்டு நிழலில் உலர்த்தி எடுத்து வைத்த-கீழா நெல்லிச் சமூலத்தால் ஒரு இரும்பு வாணலில் போட்டு ஆலைக் கரண்டியால் வருத்து-துழாவிக் கொண்டே வர

நாகம் மணல் போல் ஆகிப்பிறகு சாம்பலாகி விடும் சாம்பலான பிறகு சிற்றுமணக்குச் சாறு சொட்டு சொட்டாக குத்தி வருக்க நாகம்சிரி-மத்தாப்பு போல் நீல நிறமாக எரியும்—தீப்பற்றி எரிதல் பூராவும் அடங்கிய பிறகு எடுத்து ஒரு நாள் ஆற வைத்து மறுநாள் கீழா நெல்லிச் சாற்றில் ஒரு சாமம் அரைத்து பில்லை தட்டி ஓட்டிலிட்டு சீலை 3 செய்து 20 எருவில் ஒரு புடமும் 3-ம் நாள் பசும் பாலால் ஒரு சாமம் அரைத்து மேற்கண்டபடி ஒரு புடமும் போட்டுஎடுத்து பில்லைகளை கல்வத்திலிட்டு அரைத்து பஸ்பத்தை ஒருகல்கார்க்கு சீசாவில் வைத்துக்கொள்ளவும்

**அனுபானம்:**—பசுநெய்—வெண்ணெய் இவைகளில் 2முதல் 4 அரிசி எடை கொடுக்க மூலமுளை – குன்மம்—வயிற்றுக் கடுப்பு—கைகால் ஊறல்—வெள்ளை – வெட்டை மூலம் முதலியன குணமாகும்.

**பத்தியம்:**—உஷ்ண பதார்த்தம்—புளி-புகை நீக்கவும்.

## பசும் கல்நார்—பஸ்பம்

பசும் கல்நார் 3 பலம் வாங்கி கல் சுண்ணாம்பு நீரில் 3 நாள் ஊற வைத்து எடுத்து மஞ்சள் கருசணங்கண்ணி என்னும் பொற்றலை கையாந்தகரை அரைத்தசாந்தில் ஒருதேங்காய் பிரமாணம் எடுத்து அதில் ஷை கல்நார் துண்டுகளை வைத்து சீலை 3 செய்து 10 எருவில் புடம் போட பஸ்பமாகும்.

**அனுபானம்:**—பசு நெய்-வெண்ணெயில் 2 முதல் 4 அரிசி எடை சாப்பிட உஷ்ணம்-கபம் – தீரும் – தந்தசுத்தி -செய்தால் பல்இருக்கும்.

**பத்தியம்:**—உஷ்ண பதார்த்தம்—புளி—புகை நீக்கவும்.

## சிங்கி பஸ்பம்

கலைமான் கொம்பு-ஒரு சாண் வெட்டிக் கொண்டு பிளந்து

பொடியாக்கி அதை வெள்ளைப்பூ பூக்கும் வேளைச்சாற்றில் கொம்புகள் முழுக மூன்று நாள் ஊறப்போட்டு எடுத்துக் கழுவி வெயிலில் உலர்த்தி உளுந்து கொஞ்சம் அரைத்து சீலையில் தடவி அந்த கொம்புகளுக்கு மே லே சுற்றி 20 எருவில் ஒரு புடமும் மறுபடி ஷை கொம்புகளை எடுத்து குப்பை மேனி இலையை அரைத்து ஒரு தேங்காய் பிரமாணம் சாந்தில் ஷை கொம்புகளை வைத்து 3 சீலை செய்து 20 எருவில் மறுபடியும் ஒரு புடம் போட்டு எடுத்து பிறகு ஷை பில்லைகளை பசும் பால் விட்டு அரைத்து பில்லை தட்டி காய வைத்து எடுத்து பில்லைகளை ஓட்டில் வைத்து 3 சீலை செய்து 20 எருவில் புடம் போட்டு எடுத்து கல்வத்தில் போட்டு அரைத்து பஸ்பத்தை கல்கார்க்கு சிசாவில் வைக்கவும்.

**அனுபானம்:**—காலை மாலை 2 முதல் 3 அரிசி எடை தேனில் கொடுக்க இருமல்—சுவாசம்—காசம்—க்ஷயம் தீரும்.

**பத்தியம்:**—சீதள பதார்த்தம்—புளி—புகை—நீக்கவும்

## தாளக பஸ்பம். அனுபவ முறை

ரேக் தாளகம் 1 பலம் வாங்கி கல் சுண்ணாம்புக்குள் வைத்து கழுதை அமுரியால் 7 தடவை தாளித்து சுத்தி செய்து கொண்டு முற்றின பிரமத்தண்டு சாற்றால் 4சாமம் அரைத்து பில்லை தட்டி காய வைத்து ஷை பில்லையை ஓட்டிலிட்டு 7 சீலை வலுவாகச் செய்து 10 எருவில் புடமிட்டு எடுத்துப் பிறகு ஷை பில்லையை ஓட்டிலிடாமல் 2எருவின் மத்தியில் வைத்து புடமிட்டு எடுக்க அதிக காரமுள்ள பஸ்பமாகும். அதை எடுத்து கல்கார்க்கு சீசாவில் வைக்கவும்.

**அனுபானம்:**—தேனில் காலை மாலை 2 அல்லது 3 அரிசி எடை கொடுக்க க்ஷயம்—காசம்—கிரந்தி—சூலை—மேகம்-குஷ்டம்—சுரம் முதலிய கடுமையான ரோகங்கள் தீரும்.

**பத்தியம்:**—தயிர் மோர் வெங்காயம் முதலிய குளிர்ந்த பதார்த்தம் நீக்கவும்.

## வீர பஸ்பம் அனுபவ முறை

வீரம் 1 பலம் இள நீரில் போட்டு ஒரு கொதி கொதித்த உடன் எடுத்துக் கொள்ள சுத்தியாகும். கொதிக்கும்போது ஆவிபடாமல் தூரமாக நிற்கவும். 4 பலம் பிடிக்கக் கூடிய வாய் குறுகிய ஒரு மண் சொப்புக்குள் 2 பலம் வயிற்றுவலி சோடா உப்பு போட்டுமத்தியில் சுத்தி செய்த வீரக்கட்டியை வைத்து அதன் மேல் 2 பலம் மீதி சோடா உப்பை கொட்டி அழுத்தி புளியாரைச்சாறு 1 பலம் வைத்துக் கொண்டு ஷை சொப்பில் சிறுகச் சிறுக விட சோடா உப்பு பொங்கிப் பொங்கி அழுந்தி மத்தியிலுள்ள வீரக் கட்டியை ஓடவிடாமல் இறுகப் பிடித்துக் கொள்ளும் ஷை சொப்பு வாய் புரத்துக்குச் சரியான ஒரு சில்லை எடுத்து தேய்த்து சந்தில்லாமல் ஷை சொப்பின் வாயில் வைத்து 10 சீலை வலுவாகச் செய்து காயவைத்து 10 எருவில் புடம் போட செந்தூரமாகும். வீரச் செந்தூரம் மஞ்சள் நிறமாக இருக்கும். பிறகு புடத்தை பிரித்து வாய்ப்புறமுள்ள சில்லை எடுத்து விட்டு ஒரு பேனாக் கத்தியால் முதலில் சோடா உப்பை சுரண்டி எடுத்துக்கொண்டு பிறகு மத்தியிலுள்ள வீரக் கட்டியை கல்வத்திலிட்டு அரைத்து உடனே ஒரு கல்கார்க்கு சீசாவிற்குள் போடவும் பிறகு ஷை சோடா உப்பை தனியாக அரைத்து வேறொரு சீசாவில் வைக்கவும். சகல வயிற்றுவலிக்கும் ஷை சோடா உப்பை வலிவருவதற்கு முன் ஒரு ரூபா அளவு எடுத்து வெந்நீரில் போட்டு கொடுக்க குணமாகும்.

**பத்தியம்:**—பித்தவாய்வு பதார்த்தம் நீக்கவும். வீரச் செந்தூரத்தை பனவெல்லத்தின் மத்தியில் வைத்து உருட்டி மெல்லாமல் விழுங்கவும் பார்சவாய்வு தோஷம் கபரோகம்

முதலியனவும் தேனில் இழைத்து முலைப்பாலில் கொடுக்க ஜன்னியும் நீங்கும்.

**பத்தியம்:—**புளி, புகை, கடுகு, நல்லெண்ணெய், நீக்கவும்.

## மஹா கருவங்க பஸ்பம் அனுபவ முறை

கருவங்கம் 1 சேர் எடுத்து நல்லெண்ணெய் இலுப்பெண்ணெய் எலுமிச்சம் பழச்சாறு இவைகளில் ஒவ்வொன்றிலும் 21 தடவை உருக்கி உருக்கி சாய்க்க சுத்தியாகும். சுத்தி செய்தகருவங்கத்தை எடுத்து ஒரு இரும்பு வாணலில் போட்டு உருக்கி அதை ஒரு ஆலக்கரண்டியால் கிளறி நிழலில் உலர்த்திய நாயுருவிச் சமூலம் சிறுகச் சிறுகப் போட்டு கருவங்கத்தை வருத்துக் கொண்டே போனால் மணல் போல் ஆகிவிடும். பிறகு கட்டிக் கற்பூரம் இரசம் கொடுக்க ஷை கருவங்க மணலிலிருந்து முத்து முத்தாக மணிகள் இறங்கும். பிறகு நாயுருவிச் சமூலம் போட்டு வருத்துக் கொண்டே போனால் கருவங்கம் சாம்பல் நிறமான விபூதி போல் ஆகிவிடும், இவ்விதமாக பன்னிரெண்டு மணி நேரம் வருக்க வேண்டும். 4 மணி நேரம் 3 மணி நேரமாக விட்டு விட்டும் வருக்கலாம் கருவங்கம் வருப்பதற்கு கடலை பட்டாணி வருக்கும் அடுப்பைப் போல் கட்டி வருக்கவும். வருப்பதற்கு கருவேலன் விறகு போட்டு எரிக்க வேண்டும்.

பிறகு சாம்பல் போல் தூளான கருவங்கத்தை எடுத்து நாயுருவிச் சமூலம் போட்டு இடித்த சாற்றால் 2 சாமம் அரைத்து எடுத்து சிறிய எலுமிச்சங் காயளவு உருட்டி, உருட்டின உருண்டைகளை அடையாகத் தனித் தனி தட்டி ஓட்டிலிட்டு மேல் ஓடு மூடி 5 சீலை செய்து 20 தருவில் புடமிட்டு எடுத்து பிறகு ஷை பில்லைகளை எடுத்து பசும் பால் விட்டு அரைத்து மேற்கண்டபடி பில்லைத்தட்டி 20 வராட்டியில் புடம் போடவும். கடைசியாக புடம் ஆறிய

பிறகு பில்லைகளை எடுத்து கல்வத்திலிட்டு நன்றாக விபூதி போல அரைத்து கல்கார்க்குசீசாவில் வைக்கவும் ஷை மருந்தை பரீக்ஷை பார்ப்பதற்கு ஒரு குன்றிமணி எடை நல்ல வெள்ளியில் ஒரு அரிசி எடை மருந்தைப் போட்டு மூசையில் உருக்கினால் வெள்ளி, வெட்டை ஆகக் கூடாது தவிரவும் ஷை கருவங்கபஸ்பத்தை ஒரு ஓலையால் மெதுவாக எடுத்து சுத்த ஜலத்தில் போட்டால் ஷை மருந்து மிதக்க வேண்டும். ஜலத்தின் அடியில் போகக்கூடாது, மேற்கண்ட இரண்டு பரீக்ஷைக்கும் சரியாக இராவிட்டால் மறுபடியும் ஷை மருந்தை நாயுருவிச்ச மூலம் போட்டு முன் போல் 2 அல்லது 3 சாமம் வருத்து முன் போல் 2 புடம் போட வேண்டும் முதல் தடவை வருப்பு அரைப்பு குறைந்தால் தான் மருந்து பரீக்ஷைக்கு நிற்காது. ஒரு அரிசி எடை பனவெல்லத்தில் வைத்து கொடுக்க சகல நீர் சம்பந்தமான வியாதிகளும் குஷ்டம், மூர்ச்சை, ரோகம் முதலிய கடுமையான ரோகங்கள் குணமாகும். குஷ்டரோகம் முதலிய நாள் பட்ட ரோகங்களுக்கு ஒன்று அல்லது 2 மண்டலம் கொடுக்கவும். கால் அல்லது 1/2 மண்டலமாக மருந்து விட்டு விட்டுக்கொடுக்கலாம் மருந்து உஷ்ணமானதால் பால், நெய் ஏராளமாக சேர்க்கலாம்.

**பத்தியம்:**—புளி, போகம், புகை, கடுகு, நல்லெண்ணெய், கசப்புபதார்த்தம், மொச்சை, கடலை, காராமணி, பயறுகள் நீக்கவும். இது மிக்க அனுபவமுறை பத்தியம் இல்லாமலும் சாப்பிடலாம்

## ரச பஸ்பம் அனுபவ முறை

ரசம் பலம் 1. கோடகசாலை இலைசாறு விட்டு 2 சாமம் (அதாவது ரசம் வெண்ணெய் ஆகும் வரையில்) அரைத்து வழித்து 4 பில்லைகளாக தட்டி வெய்யிலில் நன்றாக காய வைத்து எடுத்து ஒரு சிறிய மண் சட்டியில் வைத்து

மேலொரு பொருத்தமான சட்டி மூடி நடுவில் சந்தில்லாமல் புற்று மண்ணும் களிமண்ணும் அரைத்துத் தடவி 10 சீலை செய்து காய வைத்து 2 பலம் எடையுள்ள நன்றாகக் காயவைத்த எரு (எரு முட்டை) 6 அல்லது 7ல் புடமிட பஸ்பமாகும். (ஒரே புடம்போதும்) வாய் பிடிக்காது ஜன்னி உதிரச்சிக்கல் இவைகளுக்கு தேனில் 1 அல்லது 2 அரிசி எடை. வாய்வு, கைகால் முடக்கு மேகம் சூலை 18 கிரகணி சுவாசம் க்ஷயம் நேத்திரரோகம் 94 மாந்தம் 8 முதலியவைகளுக்கு 1 அல்லது 2 அரிசிஎடை பனவெல்லத்தில் கொடுக்கவும்.

பத்தியம்:—புளி, புகை, போகம் கூடாது.

## ஆனைக்கால் தீர கற்பூர பஸ்பம்

பூ கற்பூரத்தை ஒரு சாமம் கற்பூர வள்ளி சாற்றால் அரைத்து கற்பூர வள்ளி இலையை அரைத்து கற்பூரத்திற்கு கவசம்செய்து 7சீலைசெய்து 2எருவில் புடமிடபஸ்பமாகும் வெண்ணெயில் 40 நாள் கொடுக்க

## கந்தக பஸ்பம்

கந்தகத்தை நெய்குற்றி ஆலக் கரண்டியில் வைத்துக் காய்ச்சி பசும் பாலில் 10 தரம் சாய்க்க சுத்தியாகும். அதை எடுத்து புளியரனைக்கிழங்கை ஒரு நார்த்தங்காயளவு அரைத்து அதனுள் வைத்து 3 சீலை செய்து 10 எருவில் புடம் போட பஸ்பமாகும். பண எடை பனவெல்லம் அல்லது பஞ்ச தீபாக்கினி லேகியத்தில் சாப்பிட சூலை 18 கிரந்தி 9 மேகம் 20 குஷ்டம் 18 வாதம் கண்டமாலை அரையாப்பு பவுத்திரம் மேகப்புண் இவைகள் தீரும். உப்பில்லா பத்தியம்.

## சோற்று உப்பு பஸ்பம்

சாப்பாட்டுக்கு உபயோகிக்கும் உப்பை 2 பலம் எடுத்து ஒரு சட்டியில் 1 அங்குலம் உயரம் வன்னி மரத்து

பட்டைத் தூளே போட்டு நடுவில் உப்பை பரவலாக கொட்டி அதன்மேல் ஒரு அங்குலம் ஷை வன்னி மரத்துப் பட்டைத் தூளைப் போட்டு மேலொரு சட்டியால் மூடி 3 சீலை மண் செய்து 10 எருவில் புடமிட பஸ்பமாகும் பண எடை பனவெல்லத்தில் கொடுக்க வயிற்றுவலி சூலை வாய்வு முதலியவைகள் தீரும் பத்தியம் வாய்வு உஷ்ண பதார்த்தம் நீக்கவும்

## ஆமை ஓடு பஸ்பம்

ஆமை ஓட்டை துண்டுகளாக நருக்கி கோரைக் கிழங்கை ஒரு நார்த்தங்காயளவு அரைத்து அதற்குள் ஷை துண்டுகளை பொதிந்து துணி சுத்தி ஒட்டில் வைக்காமல் 5 சீலை செய்து 50 எருவில் புடமிட பஸ்பமாகும். வயிற்றில் கட்டி கண்ட குழந்தைகளுக்கு ஒரு அரிசி எடை காலை மாலை தேனில் கொடுக்கவும். சகலருக்கும் 1 அரிசி எடை நெய்யில் கொடுக்க பசி தீபனம் உண்டாகும்.

## வெள்ளி பஸ்பம்

ஒரு பலம் ஒஸ்தி வெள்ளியை குகையில் உருக்கி மகிழம்பூ சாற்றுல் சுருக்கு கொடுக்க வெள்ளி வெட்டை ஆகும். ஷை வெட்டையை எடுத்து மகிழம் பூச் சாற்றுல் 4 சாமம் அரைத்து வில்லைதட்டி உலர்த்தி அகலில் வைத்து சீலை மண் 3 செய்து 50 எருவில் புடமிட பஸ்பமாகும். காசம்—ரத்தகாசம்—மூலம்—மேகம்—நீர்சுரப்பு முதலிய வியாதிகளுக்கு ஒரு குன்றிமணி எடை தேன் வெண்ணெயில் கொடுக்க குணமாகும். உஷ்ண பதார்த்தம் நீக்கவும்.

## பலவகைப்பட்ட மருந்துகள்.

**கரந்த மெழுகு கைகண்ட முறை:—** காந்தம் பலம் 1 வீரம் பலம் 1 பூரம் பலம் 1 லிங்கம் பலம் 1 தாளகம் பலம் 1 ரசம் பலம் 1 சேங்கொட்டை பலம் 1 சுத்தி செய்த வாளம் பலம் 7. முதலில் காந்தத்தை கல்வத்திலிட்டு பொடித்துக்

கொண்டு பிறகு தாளகம், வீரம், பூரம், லிங்கம் இவைகளைச் சேர்த்து நன்றாக அரைத்துக் கொள்ளவும். சேங்கொட்டையை மூக்கை வெட்டி கீழே கொஞ்ச நேரம் வைத்திருந்து பால்வடிந்த உடன் சேர்த்து அரைத்துக் கொள்ளவும். பிறகு கல்வத்தில் ரசத்தையும் சேர்த்து அரைத்துக் கொள்ளவும். பிறகு வெள்ளருகுசார் பக்காப் படி 1/2 விட்டு 6 சாமம் நன்றாக அரைத்து சாறு சுண்டும் படி அடிக்கடி வெய்யிலில் வைத்து வைத்து அரைக்கவும் அரைத்த மெழுகை நல்ல பாட்டலில் அடைத்து மூடி வைக்கவும். தீரும் வியாதி—மேக நீர்—சூதக வாய்வு-கால்கை முடக்கு-வயிற்று வலி—விரை வாதம் அண்டவாதம் இவைகளுக்கு 2 கடலை பிரமாணம் பனவெல்லம் கொத்தமல்லி துவையல் வாழைப்பழம் இவைகளில் கொடுக்கலாம்.

## சஞ்சீவி மாத்திரை

கருநாபி 1/4 பலம் ரசம் கால் பலம் லிங்கம் 1/4 பலம் அரிதாரம் 1/4 பலம். பூரம் 1/4 பலம் கெந்தி 1/4 பலம் ரசச் செந்தூரம் 1/4 பலம் கிராம்பு 1/4 பலம் ஜாபத்திரி 1/4 பலம் ஏலரிசி 1/4 பலம் சுக்கு 1/4 பலம் மிளகு 1/4 பலம் அரிசி திப்பிலி 1/4 பலம் கடுக்காய் தோல் 1/4 பலம் நெல்லிக்காய் தோல் 1/4 பலம் தானிக்காய் தோல் 1/4 பலம் சுத்தி செய்த வாளம் 4 பலம் (அதாவது ஷை 16 சரக்குகளின் எடைக்கு சமான எடை) ஷை தாது சரக்கு (1-7) களை சுத்தி செய்து சேர்க்கவும். ஷை சரக்குகளை எலுமிச்சம் பழச்சாற்றால் 1 சாமம் முலைப்பாலால் 2 சாமம் சோத்துக்கத்தாழை சாற்றால் (குமரி சாறு) 4 சாமம் அரைத்து சரக்கொன்றைப் பட்டைச் சாற்றால் 1 சாமம் அரைத்து (உளுந்து) அளவாய் மாத்திரை உருட்டிக் கொள்ளவும். (அனுமானம் அகஸ்தியர் குழம்புக்கு சொல்லியபடி கீழ்க்கண்ட விதம்) 1/4 பண எடை வீதம் கொடுக்கவும்.

| | | |
|---|---|---|
| குளிர் ஜுரம்-வாத ஜுரம் ஜன்னி-அண்டவாதம் மூல வாய்வு | } | இஞ்சிச்சாறு |
| தேள் கொட்டல் | — | வெங்காயச்சாறு |
| நீர் சுருக்கு நீர் கடுப்பு கல்லடைப்பு | } | சங்கம் குப்பிச் சாறு அல்லது இளநீர். |
| மகோதரம் வெட்டை | — | அகத்தி இலைச்சாறு |
| வாத ஜுரம் | — | நொச்சி இலைச்சாறு |
| விஷம் | — | வெற்றிலைச் சாறு |
| பித்த ஜுரம் | — | கடுக்காய் அல்லது கொத்த [மல்லி கஷாயம் |
| சிலேத்தும ஜுரம் | — | திப்பிலி கஷாயம் |
| பித்த வெட்டை | — | விலாமிச்சை வேர் கஷாயம் |
| இருமல் | — | கடுக்காய் தூளில் |
| அதிசார ஜுரம் | — | ஜாதிக்காய் தூள் |
| இரத்த மூலம் | — | பசு நெய் |
| வாதம் | — | தேங்காய்ப் பால் |
| பித்தம்—பாண்டு | — | பசும் பால் |
| தீராத பெண்ணுக்கு 9 நாள் விட்டு விட்டு கொடுக்கவும். | } | செம்மறி ஆட்டுப்பால் |
| ஜன்னி 13 | — | வெள்ளைப் பூண்டு தைலம் |
| வாய்வு | — | ஆமணக்கெண்ணெய் |
| சூதக வாய்வு | — | வெள்ளாட்டுத் தயிர் |

## சங்கு பாஷாண மெழுகு அல்லது வெள்ளை பாஷாண மெழுகு

வெள்ளைபாஷாணம் அல்லது சங்குபாஷணம் பலம் 1 தாளகம் பலம் 1/2 இரசம் பலம் 1/2 வெண்காரம் பலம் 1/2 இவைகளை எருக்கம் பால் விட்டு அரைத்து மெழுகு பதமாக்கி வெள்ளைத் துணியில் முடிந்து ஒருகலயத்தில் இருகு

கள்ளிப் பால் படி 1/2 விட்டு ஷை மருந்தை போல் கட்டி பால் சுண்டஎரிக்கவும். மெழுகை தேன் விட்டு அரைத்துக் கொள்ளவும். 4448 வியாதிகளுக்கும் தேன் பனவெல்லம் இஞ்சி கஷாயம் சித்தரத்தை கஷாயம் இவைகளில் அனுமானம்–பத்தியம்–பச்சரிசி – நெய் – பாசிப்பயறு – பால் உப்பில்லாமல் சாப்பிடவும். மருந்து பாசிப்பயிரளவு கொடுக்கவும். மேக ரோகங்களுக்கு காலை மாலை 2 வேளையும் கொடுத்து வர கண் சிவப்பேறி தினவெடுக்கும் அப்போது மருந்தை நிறுத்திக் கொள்ளவும்.

## சுகபேதி எண்ணெய்

சுத்தி செய்த வாளபருப்பு பலம் 2½ இந்துப்பு பலம் 1/2 வளையலுப்பு பலம் 1/2 அட்டுப்பு பலம் 1/2 உவருப்பு பலம் 1/2 வெடியுப்பு பலம் 1/2 முற்றிய பெரிய தேங்காய் 4 கொண்டு வந்து திருகி பூவை எடுத்து மேற் கூறிய 6 சரக்குகளையும் நன்றாய்க் கல்வத்தில் அரைத்து தேங்காய்ப் பூவுடன் கலந்து புட்டவியலாக வேக வைத்து ஷை பூவை எடுத்து பிழிந்தால் பால் வரும் அவ்விதம் 2, 3 முறை அவித்து பிழிந்த பாலை எடுத்து வாணலில் விட்டு காய்ச்சி எண்ணெய் எடுத்து ஒரு துளி முதல் 10 துளி வரையில் தேக திடத்தை அறிந்து வெந்நீர்–காப்பி–பால்–நீராகாரம் இவைகளில் அல்லது இளநீரில் கொடுக்கலாம் அதிகம்பேதி ஆனால் மோர்சாதம் அல்லது வசம்பை சுட்டு சாம்பலை தேனில் இழைத்து கொடுக்க பேதி நிற்கும் பத்தியம்–ரசம் சாதம்–பருப்பு துவையல்–கத்திரிப் பிஞ்சு முருங்கை பிஞ்சு–பொறியல் சாப்பிடலாம்.

## பஞ்ச தீபாக்கினி லேகியம்

ஏலம் பலம் 1/2 கிராம்பு 1/2 சிறு நாகப்பூ பலம் 1/2 திப்பிலி பலம் 2 மிளகு பலம் 2½ பனைவெல்லம் பலம் 12 பசும் நெய் பலம் 4 தேன் பலம் 1 முதலில் 1 முதல் 5

சரக்குகளையும், வெய்யிலில்நன்றாக காயவைத்து கல்லுரலில் இட்டு இடித்து வஸ்த்ர காயம் செய்து கொள்ளவும். பின்பு பனவெல்லத்தை தூள் செய்து 1/2 சேர் பசும்பாலில் போட்டு பாகு செய்து ஷை வஸ்த்தர காயம் செய்யப்பட்டுள்ள சரக்குகளை கொட்டி கிண்டி நன்றாக மெழுகு பதத்தில் வரும் போது 6 பலம் நெய்யும் 3 பலம் தேனும் பெய்து இறக்கிக் கொண்டு காலை மாலை கொட்டைப்பூபாக்கு அளவு சாப்பிட தாது புஷ்டி-பசிதீபனம் முதலிவை உண்டாகும்

## கஸ்தூரி மெழுகு

கஸ்தூரிவராகனெடை 1/2 குங்கமப்பூ வராகனெடை. 1½ சுக்கு வராகனெடை 2 கிராம்பு-ஜாதிக்காய் கோஷ்டம்-அக்கிராகாரம்-அதிமதுரம்-அதிவிடயம் வராகனெடை 1 இவைகளை கல்வத்திலிட்டு தேன் விட்டரைக்க மெழுகாகும். குழந்தைகளின் மாந்தம்—ஜுரம்—ஜன்னி—வலிப்பு இழுப்பு—கபரோகம்—வயிற்றுப் போக்கு முதலியவைகளுக்கு 1/2 குன்றிமணி அளவு தேனில் கொடுக்க குணமாகும் வயிற்றுப் போக்குக்கு பெரியவர்களுக்கு 1 குன்றிமணி எடை கொடுக்கவும். பத்தியம் இலேசான ஆகாரம் கொடுக்கவும்.

## மாந்த எண்ணெய்

வேப்பெண்ணெய் படி 1/2 கொடிக்கள்ளிப் பால் 1/2 பலம் பெருங்காயம் பலம் 1/2 வசம்பு பலம் 1/2 வசம்பை தட்டிப் போட்டு எண்ணெயை கொதிக்க வைத்து பிறகு ஷை பாலை ஊற்றி அதன் பின் காயத்தைப் பொடித்துப் போட்டு பெருங்காயம் பொரிந்தவுடன் இறக்கி வைத்து எண்ணெயை வடித்துக் கொள்ளவும். ஒரு பைசா எடை பெரிய குழந்தைகளுக்கு கொடுக்ககுழந்தை (3 மாத முள்ளதற்கு) க்கு 5 முதல் 10 துளி முலைப்பாலில் தாய்புளிநீக்கி சாப்பிடவும். 36 மணிக்கு ஒரு தடவை வீதம் 3 தடவை கொடுக்கவும்.

## விக்கல் ரேகம் (5)

தாமரைப் பருப்பை அரைத்து ஒரு பாக்களவு வெந்நீரில் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

## சாதாரண வாந்தி

ஓமத்தை கருகாமல் வருத்து நன்றாக தேய்த்து உமி நீக்கி பொடித்து தேனில் 1 மணிக்கு ஒரு முறை ஒரு தம்பிடி அளவு கொடுக்கத் தீரும். ஆகாரம் பார்லி கஞ்சி-நொய் கஞ்சி இலேசாகக் கொடுக்கவும்.

## அண்ட வீக்கம்

கழற்சி பருப்பு (கெச்சக்காய் பருப்பு) 1 பலம் பூண்டு 1/4 பலம் மிளகு 1/16 பலம் சுக்கு 1/16 பலம் சீரகம் 1/16 பலம் பசும் பால் விட்டு மைபோல் அரைத்து ஷை சாந்தை 6 அடைகளாத் தட்டி விளக்கெண்ணெய் 8 பலம் ஒரு ஈயம் பூசியபாத்திரத்தில் விட்டு எண்ணெய்காய்ந்ததும் ஷை வடைகளை எண்ணெயில் போட்டு வெந்ததும் எடுத்து வைத்துக் கொண்டு ஷை எண்ணெயை சீசாவில் ஊற்றி வைத்துக் கொண்டு காலையில் 3 நாள் ஷை எண்ணெய் 2 பலம் வெரும் வயிற்றில் சாப்பிட்டு பேதியானதும் ரசம் சாதம் பொரி குழம்புமுதலிய லேசான ஆகாரம் சாப்பிட்டு ஷை வடைகள் 2 மாலையில் வெரும் வயிற்றில் சாப்பிடவும் வாய்வு பதார்த்தம் நீக்கவும்.

## கண்ணோய்க்கு

கருவேலங்கொழுந்து ஒரு எலுமிச்சங்காயளவு எடுத்து அரைத்து அதை இரண்டு பாகமாக்கி தட்டி இரவில் சாப்பிட்டு படுக்கப் போவதற்கு முன்பு கண்களை மூடிக்கொண்டு கண் இமைகளின் மேல் ஷை தட்டையாக தட்டின சாந்தை வைத்து அதன் மேல் வெற்றிலையை வைத்து ஒரு துணியால் கட்டி கொண்டு தூங்கி விடவும்

காலையில் கட்டை அவிழ்க்க. கண் கூசுதல்—கண் சிவப்பு போகும்இவ்விதம் 3நாள்கட்ட நாள்பட்டகண்ணோய்களும் தீரும்.

## மலச்சிக்கலுக்கு

காபி சூடாக இருக்கும் போது அதில் கொட்டைப் பாக்களவு வெண்ணெயை போட்டு கரைந்தவுடன் காலை மாலை வெரும் வயிற்றில் 3 நாள் சாப்பிடவும். இரவில் படுக்கைக்கு போகு முன் விளக்கெண்ணெய் அரையணு அளவு சாப்பிடவும். இவ்விதம் 3 அல்லது 5நாள் சாப்பிட மலச்சிக்கல் தீரும். தட்டான் குமட்டியில் கருகாமல் பொறித்த படிகாரத்தூள் 2 அரிசி அளவு காலை மாலை நெய் அல்லதுவெண்ணெயில் சாப்பிடவும். 12 வயதுள்ளசிறுவர்களுக்கு 1 அரிசி அளவு கொடுக்கவும்.

## உஷ்ணம் தணிய சந்தனாதி தைலம்

பொன்னாங்கண்ணிச் சாறு 1/16படி கீழாநெல்லிச் சாறு 1/16 படி கரசனாங்கண்ணிச் சாறு 1/16 படி இளநீர் 1/16 படி பசும் பால் 1/16 படி கஸ்தூரி மஞ்சள் சுக்கு மிளகு திப்பிலி கடுக்காய்தோல் தானிக்காய்தோல் நெல்லி வற்றல் அதிமதுரம் கோஷ்டம் கருஞ்சீரகம் சீரகம் ஏலம் சந்தனத்தூள் வகைக்கு பலம் 1/4 கொம்பரக்கு பலம் 1/2 ஷை சரக்குகளை அரைத்து அச்சாந்தை ஒரு இரும்பு வாணல் அல்லது வாய கன்ற ஒரு ஈயம் பூசின பாத்திரத்தில் போட்டு ஷை சாறுகள் பால் இளநீர் இவைகளை அதில்ஊற்றி கலக்கி அதோடு நல்லெண்ணெய் படி1/4 சேர்த்து அடுப்பில் வைத்து நீர் சுண்டி சல சலப்பு அடங்கும் வரையில் எரித்து சல சலப்பு அடங்கி எண்ணெய் நுரை கட்டி மேலே பொங்கி வரும் சமயத்தில் எண்ணெய் தீயாமல் வேறொரு ஈயம் பூசின பாத்திரத்தில் மாற்றி

வெய்யிலில் 3 நாள் வைத்து பிறகு காலையில் 7 மணிக்குள் ஸ்நானம் செய்து வர உஷ்ணம் தணியும். மோர் வெண்டை பூசனி முதலிய குளிர்ந்த பதார்த்தங்களை ஸ்நானம் செய்யும் நாட்களில் நீக்கவும்.

## ரோஜாப்பூ குல்கந்து

500 ரோஜாப்பூக்களை கொண்டு வந்து காம்புகளை நீக்கி இதழ்களை மட்டில் ஒரு வாய கன்ற ஈயம் பூசின பாத்திரத்தில் போட்டு ஒருவீசை சீனாகற்கண்டை உரலில் போட்டு இடித்துஅத்தூளை சலித்து சன்னமான அத்தூளை ஷை பாத்திரத்தில் ரோஜாப் பூக்களோடு போட்டு வாயை மூடி ஒரு நாள் வைத்திருந்து மறுநாள் காலை ஷை பாத்திரத்தில் ஊறி இருக்கும் ஜலத்தை கொஞ்சம் எடுத்து அதில் குங்குமப்பூ 1/4 வராகனெடை மைபோல் அரைத்து சேர்த்து ஏலரிசித் தூள் 1/4 பலம் போட்டு ஒரு மர அகப்பையால் துழவி ஷை பாத்திர வாயயை ஒருமெல்லிய துணியால் கட்டி தினந்தோறும் ஷை ரோஜாப் பூக்கள் சாந்தாகும் வரையில் வெய்யிலில் வைத்து எடுத்து அதோடு ஒரு பலம் தேன் சேர்த்து கலந்து ஒரு சீசாவில் வைத்துக் கொண்டு காலை மாலை சாப்பிட உஷ்ணம் தணியும் பித்தம் சாந்தமாகும் பத்தியம் இல்லை.

## மஞ்சள் காமாலை

பலகரை 4 நொருக்கி எலுமிச்சம் பழச்சார் 1 பலம் இதில் ஊற வைத்து மறுநாள் எடுக்க வெண்ணெய் போலாகும் ஷை வெண்ணெயை 1 பலம் கீழா நெல்லிச் சாற்றில் கரைத்து துணியில் வடி கட்டி காலையில் 5 அல்லது 7 நாள் கொடுக்கத் தீரும். பத்தியம் உஷ்ண பதார்த்தம் நீக்கவும்

## பல் பொடி

படிகாரம் பலம் 4 உப்பு பலம்2 மிளகு பலம் 1 கோட்

டாங்கச்சி சுட்ட கரி பலம் 3 கடுக்காய் பிஞ்சு பலம் 1 கொட்டைப்பாக்கு சுட்டகரி பலம் 1 பூ கற்பூரம் பலம் 1/4 இவைகளை ஒன்ருய்ச் சேர்த்து கல்வத்திலிட்டு நன்ருக அரைத்து காற்று போகாத கல் கார்க்கு சீசாவில் வைத்து பல் தேய்க்கவும்.

## கட்டிகள் கரைப்பதற்கு

ரோஜாப்பூ போல—சிவப்பாக-புஷ்பிக்கும்-அலரி இலை ஒவ்வொன்றையும் தனித்தனி ஒடிக்க சுத்த தண்ணீர் போல் பால் வரும். அதை ஒரு விரலால் எடுத்துக் கட்டிகள் அல்லது வேறு எவ்விதமான வீக்கங்களுக்கும் காலை மாலை தளும்பத் தடவி வர வீக்கம் கரையும் எரிச்சல் இராது. வலி நீங்கி கட்டி சிறுத்து சீக்கிரம் உடையும்.

## பீனி சத்திற்கு

நெல்லி முள்ளி—மிளகு—கடுக்காய்—கஸ்தூரி மஞ்சள் வேப்பன் விதை—வகைக்கு பலம் 1 கையாந்தகரை (மஞ்சள் கரிசலுங் கண்ணி) சாற்றில் 4 சாமம் அரைத்து பில்லை தட்டி வெய்யிலில் காய வைத்து எடுத்து ஒரு பில்லையை பசும் பால் விட்டு அரைத்து தலையில் தேய்த்து வென்னீரில் 4 நாளைக் கொருதரம் ஸ்நானம் செய்யத் தீரும்.

## படிகார மெழுகு

படிகாரம் பலம் 2 பூரா சர்க்கரை பலம் 2 நெய் பலம் 1 மூன்றையும் சேர்த்து கல்வத்தில் 4மணிநேரம் அரைத்து தேற்ருங்கொட்டை பிரமாணம் காலை மாலை சாப்பிட வெட்டை, இரத்த வெட்டை தீரும்.

## பல் நோய்க்கு பொடி

காசிக் கட்டி பலம் 1 கடுககாய் தோல் பலம் 1/2 இந்துப்பு பலம் 1/4 மாசிக்காய் பலம் 1/4 பொரித்த படிகாரம்

பலம் 1/4 இவைகளை கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து காற்று போகாத ஒரு சீசாவில் வைத்துக் கொண்டு காலை மாலை பல் தேய்க்கவும்.

## மயிர் உதிர

அரிதாரம் 1/2 வராகனெடை சுண்ணம்பு 1/4 வராகனெடை சேர்த்து அரைத்து தடவி கொஞ்சம் பொருத்து கழுவவும்

## கண்ணில் துர் மாமிசம் நீக்க

4 சித்தாமணக்கு கொட்டைகளை உடைத்து அதன் பருப்பை எடுத்து எருமை சாணியில் ஒருநாள் ஊறவைத்து எடுத்து மறுநாள் தண்ணீரை விட்டு இழைத்து காலை மாலை கண்களுக்கு போடவும்.

## இரத்த மூலம்

நாக பஸ்பம் வெண்ணெய்யில் கொடுத்து போஸ்த்தக் காயை கஷாயமிட்டு காலை மாலை 3-நாள் கொடுக்கத் தீரும்.

## வாய்ப் புண்ணுக்கு

விருஷ்டி பூக்களை பசும் பாலில் போட்டு காய்ச்சி காலை மாலை வெரும் வயிற்றில் கொடுக்கவும். பொரித்த படிகாரத்தூள் 3 அரிசி எடை எடுத்து நெய் அல்லது தேனில் கலந்து நாக்கில் தடவவும்.

## பெரும் பாட்டுக்கு

ஒதியம் பட்டைச் சாறு 1/32 படி நாவப்பட்டைச்சாறு 1/32 படி கைப்பிடி ஒன்று அளவு ஓரிலை தாமரையை அரைத்து ஷை சாறுகளும் மோரும் சேர்த்து-3 நாள் காலை மாலை சாப்பிடவும்.

## நீர்கட்டு—நீர்க்கோவைக்கு கஷாயம்

சிறுக்கீரை சமூலம் 1 பலம் சங்கம் வேர் 1 பலம் நீர்

முள்ளி சமூலம் பலம்1 சுரைத்தண்டு 1 பலம் சிறுநெருஞ்சி சமூலம் 1 பலம் அருகம் புல்லின் வேர் 2 பலம் இவைகளை தூளாக அரிந்து பட்டணம் 1 படி ஜலத்தில் போட்டு கஷாயம் வைத்து 1/16 படியாக சுண்ட இறக்கி, அதில் பொரித்த வெண்காரம் 2 அரிசி எடை போட்டு காலை மாலை 3-நாள் கொடுக்க நீர் சல சலவென இறங்கும் அனுபவ முறை பத்தியம் பால்கஞ்சி முதலிய லேசான ஆகாரம்

## சீத பேதிக்கு

இலவங்கம் பலம் 1/4 கடுக்காய்ப்பூ பலம் 1/4 இவைகளை வெய்யிலில் காயவைத்து தூள் செய்து காலை மாலை 3 நாள் அரையணு துட்டு அளவு நெய்யில் சாப்பிடவும். பத்தியம் புளி காரம் நீக்கிச் சாப்பிடவும் கஞ்சி கொதி சாதம் முதலிய லேசான ஆகாரம் சாப்பிடுவது நலம்.

## இரணங்களுக்கு களிம்பு

காசிக்கட்டி துத்தம் ரசம் பருப்பு கந்தகம் வெள்ளை குங்கில்யம் வகைக்கு வராகனெடை 1 சுண்ணாம்பு வராகனெடை 4 வெண்ணெய் வராகனெடை 8 சேர்த்து மை போல் அரைத்து துணியில் தடவி இரணங்களுக்கு போடவும்.

## இரத்த வெட்டை

## மூத்திரத்தில் இரத்தம் வருவதற்கு

ஆராக்கீரை கைப்பிடி 1, கருவேலங்கொழுந்து கைப்பிடி 1, சேர்த்து பசும்பாலில் அரைத்து 1/2 சேர் பசும் பாலில் கலக்கி காலையில் 3-நாள் சாப்பிட குணமாகும். உஷ்ண பதார்த்தம் நீக்கவும் கைகண்ட முறை.

## சீதபேதி—ஜுரமில்லாதது

படிகாரத்தை தட்டான்குமட்டையில் பொரித்து கருமையாக தீய்ந்து போனதை எடுத்து விட்டு கல்வத்திலிட்டு அரைத்து பொடி செய்து (காலை மாலை 3 நாள்) கொண்டு

ஷை தூள் 2 அரிசி அளவு நெய்யில் அல்லது வெண்ணெயில் சாப்பிட்டு பிறகு மாதுளைப் பிஞ்சு 1 எருமை தயிரில் அரைத்து ஷை தயிரில் கலக்கி சாப்பிடவும்

## தேக புஷ்டிக்கு—டானிக்

பாதுமைப் பருப்பு 7 இரவில் சுத்த ஜலத்தில் ஊற வைத்து காலையில் எடுத்து அதன் மீதுள்ள தோலை உறித்து விட்டு அதோடு 1/2 பலம் கசகசா சேர்த்து அறைத்து பெரிய பனங் கற்கண்டு 1/2 பலம் சேர்த்து வென்னீரில் கலக்கி அடுப்பில் மண் அல்லது ஈயம் பூசின பாத்திரத்தில் க்ஞ்சி வைத்து கஞ்சி வெந்த பிறகு இறக்கும் சமயத்தில் ஏலரிசித்தூள் ஒருபைசா அளவு குங்குமப்பூ 2 அரிசி அளவு போட்டு இறக்கி அதோடு பசும் பால் 1/8 படி சேர்த்து காலையில்வெரும் வயிற்றில்சாப்பிடவும் ஒருவாரம் சாப்பிட்டால் மார்வலி பெருமூச்சி முதலிய ரோகங்கள் தீரும்

## சாதாரண காது குத்தலுக்கு

வேப்பெண்ணெய் 1/4 பலம் நல்லெண்ணெய் 1/4 பலம் வசம்பு ஒரு குன்றிமணி எடை காயம் 1 குன்றிமணி எடை பூண்டு 2 திரி சேர்த்து காரம் இல்லாத பாத்திரத்தில் காய்ச்சி சல சலப்பு அடங்கியவுடன் பாட்டலில் ஊற்றவும் காதில் காலை மாலை 2-3 துளிவிட்டு பஞ்சு வைக்கவும் சீதள பதார்த்தம் நீக்கவும்.

## இரத்த வாந்தி—வாயில் ரத்தம் வருவதற்கு

படிகார பஸ்பம் அல்லது தட்டான் குமட்டியில் பொறித்த படிகாரம் 2 அரிசி எடை நெய்யில் குழைத்து கொடுத்து விட்டு பிறகு கீழாநெல்லி இலை ஒரு பிடி பசும் பாலில் அரைத்து பசும் பாலில் கலக்கி காலையில் 3 நாள் கொடுக்க தீரும் நாள்பட்ட வியாதிகளுக்கு ஒரு வாரம் கொடுக்கவும் உஷ்ண பதார்த்தம் நீக்கவும்.

## பித்தத்திற்கு லேகியம்

எலுமிச்சம் பழச்சாறு 2 பலம் இஞ்சிச் சாறு 1/2 பலம் பனங் கற்கண்டு 2-1/2 பலம் சேர்த்து அதோடு நெய் பலம் 3 சேர்த்து ஒரு மண் சட்டி அல்லது ஈயம் பூசின பாத்திரத்தில் போட்டு அடுப்பில் வைத்து எரித்து சல சலப்பு அடங்கியவுடன் இறக்கி வழித்து வேறு பாத்திரத்தில் வைக்கவும். காலைமாலை ஒருபுன்னைக்காய் அளவுவெரும் வயிற்றில் சாப்பிடவும்

## பல்லில் இரத்தம் வருவதற்கு

கடுக்காய்த் தோல் சுக்கு காசிக்கட்டி இந்துப்பு இவை 4ம் சம எடையாக எடுத்து பொடி செய்து காலை மாலை பல்லில் தேய்க்க.

## இரண பிளாஸ்திரி

தேங்காய் எண்ணெயில் மெழுகு வெள்ளை குங்கிலியம் வகைக்கு வராகனெடை 4 மஞ்சள்பொடி வராகனெடை 1 போட்டு காய்ச்சி குழம்புபோல் இருக்கும் பதத்தில் துணியில் தடவி போடவும்.

## சிரங்கு தினவுக்கு

பருப்பு கந்தகத்தை இலுப்பநெய் அல்லது தேங்காய் எண்ணெயில் காய்ச்சி சொறி, சிறங்கு, ஊறல் இவைகளுக்கு காலையில் பூசி ஊற வைத்து மாலையில் இலுப்பக் கட்டி அல்லது சோப்புப் போட்டு தேய்த்து குளிக்கவும்.

## தேக அனலுக்கு

அதிமதுரம் 1/2 பலம் வெய்யிலில் காயவைத்து வெண்ணெயை விட்டு ஒரு மணி நேரம் அரைத்து காலை மாலை 2 நாள் கொடுக்கத் தீரும்.

## தேக அனலுக்கு

அதிமதுரம் 1/4 பலம் கரண்டியில் கருகாமல் வருத்து

நசுக்கி தூளாக்கி ஷ் தூளை 1/8 படி பசும் பாலில் போட்டு காய்ச்சி காலை மாலை 2 நாள் சாப்பிட தீரும்.

## சூட்டிருமலுக்கு

அதிமதுரம் கடுக்காய்த் தோல் மிளகு மூன்றும் சம எடை இளம் வறுவலாய் பொடி செய்து நெய்யில் 3 நாள் காலை மாலை சாப்பிட குணமாகும்.

## பால் இல்லாதவர்களுக்கு

கோவை இலை போதுமானது கொண்டு வந்து ஜலத்தில் அலம்பி போதுமான நெய் போட்டு சுண்டி வெள்ளைப் பூண்டு கொஞ்சம் நசுக்கிப் போட்டு சாப்பிடவும்.

## வாள சம்பந்தமான பேதிக்கு சாப்பிட்டு வயிர்ப் போக்கு அதிகமானால்

எருமை சாணத்தை கரைத்து (ஜலத்தில்) வடிகட்டி கொடுக்க நிற்கும். ஓரே தடவையில் நிற்காவிடில் 2-3 தரம் கொடுக்கலம்.

## பாஷாண சம்பந்தமான பேதி மருந்து சாப்பிட்டு பேதி நிற்காவிட்டால்

மிளகு கஷாயம் போட்டு கொடுக்கவும். ஓரே தடவையில் நிற்காவிடில் 2-3 தடவை கொடுக்கலாம்.

## கல்லடைப்பு—நீரடைப்பு

வெண்காரம் பொரித்து பொடி செய்து இளநீரில் கொடுக்கத் தீரும்.

## தலையில் பேன் நாசமடைய

குப்பைமேனி இலைச் சாற்றால் ஒரு வராகனெடை ரசத்தை அரைத்து துணி குல்லாயின் உட்புறத்தில் தடவி போட்டுக் கொள்ள 7 மணி நேரத்தில் பேன்கள் நாசமாகும்

## மூலம் வெளிப்படுவதற்கு

கற்றாழைச் சோற்றை எடுத்து ஆசனத்தில் கட்ட நீங்கும். கருணை அல்லது காட்டுக்கருணைக்கிழங்கு சமைத்துச் சாப்பிடவும்.

## வெட்டு காயங்களுக்கு

மூக்குத்திபூண்டு இலையை அரைத்து காயத்தின் மேல் வைத்து ஈரத்துணி சுத்திஈரம் காயாமல் சதாஜலம் ஊற்றிக் கொண்டு வர 3 அல்லது 5 நாள் வெட்டுபட்ட சதை கூடி விடும். சீழ் பிடிக்காது (அனுபவ முறை)

## ஜோடு செருப்புக் கடி புண்

செருப்புத்தோலை சுட்டுகருக்கி எண்ணெயில் சேர்த்து அதோடு சேங்கொட்டை தைலமும் கத்தியால் எடுத்து சேர்த்து தடவி வரவும்.

## சேத்துப்புண்ணுக்கு

மண் எண்ணெய் அல்லது சிறு பெண் குழந்தைகளின் அமரி விடவும்.

## பூச்சி வண்டு காணுக்கடிகளுக்கு

பூரம் 1 வராகனெடை கந்தகம் 1 வராகனெடை கிருஸ்ணுயில் எண்ணெய் கொஞ்சம் கொஞ்சமாய் விட்டு மைபோல் அரைத்து மறுபடியும் ஷை சாந்தில் ஷை எண்ணெய் விட்டு கலந்து கடிகளின் மேல் தடவி ஒரு நாள் ஊற வைத்து மறுநாள் வென்னீரில் ஸ்நானம் செய்யவும்.

## சுண்ணும்பு சாப்பிட்டு வாய் இரணமானுல்

மஞ்சளை அரைத்து தடவி 15 நிமிஷம் வைத்திருந்து பிறகு வாய் கொப்பளிக்கவும். இவ்விதம் ஒரு நாளைக்கு 3 தரம் செய்யவும்.

## உள் நாக்கு வளர்ந்ததற்கு

மிளகு தூளை ஒரு நாளைக்கு 3 தடவை தடவி வரவும்

## ஒற்றைத் தலைவலி

இஞ்சிச் சாறு 1/4 பலம் மிளகாய் 2 போட்டு நல் லெண்ணெயில் எரித்து ஸ்நானம் செய்துவர குணமாகும்.

## குழந்தைகள் சாம்பல் மண் சாப்பிட்டால்

கத்தரிக்காய்ச் சார் அல்லது முள்ளங்கி சாற்றில் கொஞ்சம் பெருங்காயம் (1/2 அரிசி அளவு) சேர்த்துக் கொடுக்கவும்.

## வயிற்றில் எண்ணெய் தங்கினால்

வெந்தியமும் ஜலமும் சேர்த்து கஷாயமிட்டு கொடுக் கலாம்.

## குடித்த பாலை கக்கினால்

வெள்ளைப் பூண்டு 2 திருப்பு தோல் நீக்கிய ஓமம் 1 சல்லி அளவு சேர்த்து கஷாயமிட்டு கொடுக்க குணமாகும்.

## நன்னாரி ஷர்பத்து

10 பலம் நொறுக்கின நன்னாரிவேரை 2 படி ஜலத்தில் போட்டு 1/2 படியாக்கி வடித்து 1/2 வீசை சர்க்கரை சேர்த்து தேன் பதத்தில் காய்ச்சி அதோடு கால் வராக னெடை குங்குமப்பூ ஷை கஷாயத்தில் அரைத்து சேர்த்துக் கொள்ளவும். தினம் காலை மாலை ஒரு அவுன்ஸ் வீதம் ஜலத்தில் சாப்பிட்டுவர கை கால்எரிவு உஷ்ணம் நீர்க்கட்டு முதலியன தீரும்.

## பல்வலி—தலைவலி—ஜலதோஷத்துக்கு

மென்தால் 1. வி. இடை

ஓம உப்பு (தைமால்) 1. வி. இடை பூகற்பூரம்—1 வி. இடை—குங்குமப்பூ 2 அரிசி எடை ஷை 1 முதல் 3 சரக் குகளை தனித் தனியாக நொறுக்கி தூளாக்கி ஒரு கல் கார்க்கு சீசாவில் ஒன்றாகப்போட்டு பிறகு ஷை குங்குமப்பூ

போட்டு கல்கார்க்கால் மூடி காற்றுப் போகாத ஒரு பெட்டியில் வைக்க வேண்டும் 3 மணி நேரத்தில் திராவக மாக மாறும். அதை எடுத்து தலைவலி ஜல தோஷத்துக்கு நெற்றியிலும் நெற்றிப் பொறியிலும் தடவினால் 2 நிமிஷத் தில் குணமாகும். சொத்தைப் பல்லில் ஷை திராவகத்தை துடைப்ப குச்சியில் சுற்றிய ஒரு பஞ்சில் நனைத்து 10 நிமிஷம் வைத்தால் விஷ நீரெல்லாம் எண்ணெய் போல் இறங்கும். அதைத் துப்பிவிட வேண்டும். மற்ற இடங்களில் பட்டால் விரு விருப்பாக இருக்கும் அது விஷமல்ல வாய் விரு விருப்பை நீக்க படிகாரத்தூளை வெந்நீரில் கலக்கிவாய் கொப்பளிக்க தீரும் இவ்விதம் காலை மாலை 3 அல்லது 5 நாள் ஷை திராவகத்தை வைத்தால் சொத்தைப் பல்லில் உள்ள பூச்சிகள் சாகும். மற்றப் பற்கள் கெடாது. பல்லை பிடுங்க வேண்டாம். பலவித தந்த ரோகங்களுள் தந்த வாய்வு பல் கூசல் இவைகளுக்கு பல்லில் தடவ நீங்கும் அமிர்தாஞ்சனத்தை விட மேலானது.

**பத்தியம்:**—வாய்வு சீதள பதார்த்தங்கள் நீக்கவும்.

## டைபாயிட்—மலைஜுரம்—முதலிய சகல விஷ ஜுரங்களுக்கு கஷாயம்.

நில வேம்பு—1/4 பலம்
நாள் சென்ற வேப்பம்பட்டை—2 பலம்
வெப்பாலை அரிசி—1/8 பலம்
பேய்ப்புடல் பித்தப்புடல்—1/8 பலம்
வெள்ளருகு (அருகம்புல் அல்ல)—1/8 பலம்
சிந்தல் தண்டு—1/8 பலம்
ஆடாதோடை இலை (கைப்பிடி)—1 பிடி இலை
துளசி இலை கைப்பிடி—1 பிடி இலை
பற்பாடகம்—1/8 பலம்
விஷ்ணு காந்தி (கைப்பிடி)—1 பிடி இலை

தும்பைப்பூ—20
சுக்கு—1/8 பலம்
பேரறத்தை—1/8 பலம்
கண்டு பரங்கி—1/8 பலம்
இஞ்சி—1/2 பலம்

ஷை கடை சரக்குகளை தூளாக இடித்து இலைகளை கிள்ளி ஒரு மண் சட்டியில் பட்டணம் படி 3/4 ஜலம் வைத்து கஷாயம் வைக்கவும். கஷாயம் 3/32 படியாக சுண்டின பிறகு வடிகட்டி 1/16 படி கஷாயத்தில் பூரா சர்க்கரை 1/4 பலம் போட்டு காலை மாலை வெரும் வயிற்றில் சாப்பிடவும். மீதி கஷாயத்தை சட்டியிலேயே சரக்குகள் காயாமல் வைக்கவும் ஷை சட்டியில் சரக்குகளை எடுக்காமல் மேற்கொண்டு 2 வேளைக்கு 3/4 படி ஜலம் விட்டு முன் போல் கஷாயம் வைத்து சாப்பிடவும். 3 வேளைக்கு பிறகு ஷை சரக்குகளை புதிதாகப் போட்டு கஷாயம் வைக்கவும். 5-7 அல்லது 10 நாளில் சகல கொடிய ஜுரங்களும் நீங்கும் நாளுக்கு நாள் ஜுரங்களின் வேகம் குறையும்.

**பத்தியம்:**—முருங்கை கத்தரி அவரைக்காய் பொரியல் பொரிக்குழம்பு ரசம் சாதம் மருஉலை சாதம்.

## சாதாரண ஜுரங்களுக்கு

இஞ்சி 1/4 பலம் துளசி இலை 1-கைப்பிடி தும்பை பூ 20 (12 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு 1/2 அல்லது 1/4 பாகம்) ஷை சரக்குகளை அரைத்து 2 அல்லது 3 அவுன்ஸ் ஜலத்தில் கரைத்து மண் சட்டியில் ஊற்றி ஒரு பொங்கு பொங்கின உடன் இறக்கி வடிகட்டி, ஒரு சல்லி அளவு தேன் விட்டு காலை மாலை 3-நாள் சாப்பிட தீரும்.

**பத்தியம்:**—மேற்கண்டபடி

## உடம்பு உஷ்ணம் தணிய

அதிமதுரக் குச்சி 1 அங்குல நீளம் நசுக்கி கருகாமல்

கரண்டியில் வதக்கி நசுக்கி 1/8 படி பசும் பாலில் போட்டு காய்ச்சி வெரும் வயிற்றில் காலை மாலை 3-நாள் சாப்பிடவும் உஷ்ண பதார்த்தம் நீக்கவும்.

## விடாத வாந்தி நிற்க

ஏலரிசித் தூள் 2 பைசா அளவு
சட்டியில் வருத்து தேய்த்த தோல் நீக்கிய ஓமத் தூள் 1/4 அணு அளவு மயில் இறகு சாம்பல் 2 பைசா அளவு பட்டுத்துணி சாம்பல் 2 பைசா அளவு வாழ்ச்சரகு சாம்பல் 2 பைசா அளவு சேர்த்து 3 சிட்டிகை தூளை தேனில் குழைத்து 1/2 அல்லது 1/4 மணிக் கொரு தரம் கொடுக்கவும் அவசரத்துக்கு ஓமத்தூள் மட்டில் 2 பைசா அளவு தேனில் கொடுக்கலாம்.

**பத்தியம்:**—நெற்பொரி கஞ்சி பார்லி கஞ்சி

## தீ—கஞ்சி—வெந்நீர்பட்ட புண்களுக்கு

புண்பட்ட இடத்தில் உடனே தேன் தளும்ப 2-3 தரம் தடவ எரிச்சல் நீங்கும். கொப்பளிக்காது புண் ஆற தேங்கா யெண்ணெய்யில் பூ கற்பூரத்தூள் போட்டு குழைத்து தடவவும் காணுங்கோழை இலை அரைத்துப் போட சில் என்று குளிர்ந்து விடும்.

## பதார்த்தங்களைச் சுத்தம் செய்யும் முறை

**தங்கம்:**—தங்கத் தகடுகளுக்கு ஒவ்வொரு தடவையும் செம்மண் பூசி 10 தரம் நெருப்பைப் போல் காய்ச்சி எடுக்க சுத்தியாகும்.

**வெள்ளி:**—வெள்ளித் தகடுகளைக் காய்ச்சி பழுப் பாகல் கிழங்கு சாற்றில் 7 தடவை துவைக்க சுத்தியாகும்.

**பவளம்:**—எலுமிச்சம் பழச்சாற்றில் ஒருநாள் ஊறவைத்து எடுக்க சுத்தியாகும்.

**இரசம்:**—மஞ்சள் தூளும் செங்கல் தூளும் சேர்த்து இரசத்தை கல்வத்தில் அரைக்க அரைக்க சுத்தி வால் ரசம் மிக சுத்தியான்து

**தாளகம்:**—கல் சுண்ணும்புக்குள் வைத்து கழுதை அமறியால் 10 தரம் தாளித்து எடுக்க சுத்தியாகும்

**காந்தம்:**—பொற்றலை கையாந்தகரைச்சாற்றில் காந்தத்தை உருக்கி ஊற்ற சுத்தியாகும்.

**அயம்:**—அரத்தால் அராவிய அயப் பொடியை 3 நாள் பழச்சாற்றில் ஊற வைத்து எடுக்க சுத்தியாகும்.

**கற்பூர சலாசத்து:**—எலுமிச்சம் பழச்சாற்றில் 1 நாள் ஊற வைத்துப் பிறகு எருக்கம் பாலில் 2 நாள் ஊறவைக்க சுத்தியாகும்

**முத்து:**—சங்கம் பழச் சாற்றில் 2 நாள் ஊற வைத்து எடுக்க சுத்தியாகும்.

**கருவங்கம்:**—நல்லெண்ணெய் இலுப்பெண்ணெய் எலுமிச்சம் பழச்சாறு இவைகளில் ஒவ்வொன்றிலும் 21 தடவை உருக்கி ஊற்ற சுத்தியாகும்.

**கந்தகம்:**—ஆலைக் கரண்டியில் நெய் ஊற்றி அதில் கந்தகத்தைப் போட்டு உருக்கி 10 தடவை பசும்பாலில் சாய்க்க சுத்தியாகும்.

**நாபி:**— எருமை மூத்திரத்தில் 2 நாள் ஊற வைத்து பிறகு அதில் வேக வைத்து எடுத்து எலுமிச்சம் பழச் சாற்றில் 1 நாள் ஊற வைக்க சுத்தியாகும். பிறகு உலர்த்தவும்.

**மண்டூரம்:**—வெள்ளாட்டு நீர், பசுங் கோமயம் இவைகளில் 3 நாள் ஊற வைக்க சுத்தியாகும்.

**நாகம்:**—நாகத்தை இலுப்பை நெய் ஊற்றி உருக்கி இலுப்பை நெய்யில் 10 தடவை ஊற்றினல் சுத்தியாகும்.

**மான்கொம்பு:**—கத்தியால் பில்லைகளாக நறுக்கி குப்பை மேனிச்சாற்றில் ஒருநாள் ஊறவைத்து எடுக்க சுத்தியாகும்

**பூரம் அல்லது இரச கற்பூரம்:**—இதை 10 நாள் முலைப் பாலில் ஊற வைத்து எடுக்க சுத்தியாகும்.

**வெள்ளீயம்:**—கருவங்கத்தைப் போல் சுத்தி செய்யவும்.

**அமுக்கஞங் கிழங்கு:**—பசும் பாலில் வேக வைத்து உலர்த்திக் கொள்க.

**ஜாதிக்காய்:**—கொதிக்கும் சாதத்தில் போட்டு வேக வைத்துவடித்தவுடன் எடுத்துக்கழுவி வைக்கவும். அல்லது 4 ஆக நறுக்கி நெய்யில் வருக்க சுத்தியாகும்.

**அன்னபேதி:**—நீரோகாரத்தில் 2 மணி நேரம் ஊற வைத்து எடுக்க சுத்தியாகும்.

**வாதுமைப்பருப்பு:**—சுத்தத்தண்ணீரில் 2 மணி நேரம் ஊற வைத்து மேல் தோலை உரிக்கவும்.

**சீவதைவேர்:**—பசும்பாலில் அவித்து எடுக்க சுத்தியாகும்.

**சேங்கொட்டை:**—மூக்கை வெட்டி. பிறகு நெய் அல்லது ஆமணக்கெண்ணெயில் வறுத்து எடுக்க சுத்தியாகும்.

**வீரம்:**—வீரக்கட்டியை இளநீரில் போட்டு ஒரு கொதி கொதித்தவுடன் தூர இருந்து தீயை (விறகை) இழுத்து விட்டு சட்டியை இறக்கி புகை அடங்கியவுடன் கட்டியை ஜலத்தில் கழுவி எடுக்கவும். புகைபட்டால் அபாயம்.

**மஞேசிலை:**—எருமை மூத்திரத்தில் ஒரு துணியில் மஞே சிலை முடிந்து 3 நாள் ஊற வைக்கவும்.

**அரிதாரம்:**—தாளகத்தை சுத்தி செய்வதைப் போல் செய்யவும்.

**லிங்கம்:**—முலைப்பாலில் 10 நாள் ஊற வைத்து எடுக்க சுத்தியாகும்.

**கௌரிபாஷாணம்:**—பன்றிப்பால் அல்லது மிளகு கஷாயத்தில் அவித்து எடுக்க சுத்தியாகும்.

**குதிரைபல்பாஷாணம்:**—உமிழ் நீரில் (எச்சில்) 3 நாழிகை ஊறப் போடவும்.

**கல் நார்:**—கல் சுண்ணும்பு ஜலத்தில் 3 நாழிகை வேக வைத்து எடுக்கவும்

**சீனு காரம்:**—பசும் பாலில் ஊற வைத்து எடுக்கவும்.

**கெருடக்கல்:**—கிளிகட்டி கற்றாழைச்சாற்றில் 30 நாழிகை எரிக்க சுத்தியாகும்.

**வெங்காரம்:**—எருமைச் சாணியில் சேர்த்து அலம்பிட சுத்தியாகும்.

**குக்கில்:**—எருமைப் பாலில் 3 நாள் ஊறப் போட வும்.

**தொட்டி பாஷாணம்:**—கிளியாய் கட்டி நெல்லில் அவித்து எடுக்கவும்.

**துருசு:**—கவுதும்பைச் சாற்றில் ஒரு நாள் ஊற வைத்து எரித்து எடுக்க சுத்தியாகும்.

**அஞ்சனக்கல்:**—புளியாறைச் சாற்றில் ஒரு நாள் ஊற வைத்து எடுக்க சுத்தியாகும்.

**பொன்னி மினி:**—காடியில் 3 நாள் காய்ச்சி எடுக்கவும்.

**பால் துத்தம்:**—சிறுபெண் அமுரியில் ஒரு வாரமும் பசும் பாலில் ஒரு நாளும் ஊற வைக்கவும்.

**கல் மதம்:**—சிறு நீரில் ஒரு ஜாமம் ஊற வைத்து எடுக்க சுத்தியாகும்.

**எலி பாஷணம்:**—கோமூத்திரத்தில் 7 நாள் ஊறப் போட சுத்தியாகும்.

**உருக்கு:**—வெள்ளாட்டு மூத்திரத்தில் உருக்குவை சிவக்க காய்ச்சி 21 தடவை தோய்க்கவும்.

**அப்பிரேகம்:**—கோவை இலையை அரைத்து அப்பிரேகத் துண்டுகளுக்குக் கவசம் செய்து சீலை செய்து 10 எருவில் புடம் போடவும்.

**சங்கு:**—துண்டுகளாக்கி பசுவின் பாலில் வேக வைத்து எடுக்கவும்.

**மிருதார் சிங்கு:**—பனங்கள்ளில் கிளிகட்டி எரித்து எடுக்க சுத்தியாகும்

**மயில் துத்தம்:**—பசுவின் வெண்ணெயில் 2 நாள் ஊற வைத்து எடுக்கவும்.

**சாஸ்திர பேதி:**—நார்த்தன் காய் சாற்றில் ஊறப் போட்டு எடுக்க சுத்தியாகும்.

**இரச செந்தூரம்:**—உத்தாமணி இலையை அரைத்து அதற்குள்வைத்து சீலைசெய்து 10 எருவில்புடம் போடவும்

**எட்டிக் கொட்டை:**— நெல்லில் அவித்து சிறுகளாச் சாற்றில் ஊற வைத்து பிறகு தேற்றான் கொட்டை இரசத்தில் வேக வைத்து எடுக்க சுத்தியாகும்.

**தாம்பிரம்:**—தாம்பிரப்பொடியை நாட்டு காட்டாமணக்கு சாற்றிலும் புளியாரைச் சாற்றிலும் 11நாள் ஊறவைத்து எடுக்க சுத்தியாகும்.

**வெள்ளைப் பாஷாணம்:**—ஒரு கலயத்தில் 1/4 பாகம் மிளகு கஷாயம் வைத்து வாயில் துணி கட்டி அதன் மேல் வெ்ளை பாஷாணம் வைத்து அகலால் வாயை மூடி சீலை மண் செய்து சிறுதீயால் எரித்து எடுக்க சுத்தியாகும்.

**சீமைச் சுண்ணும்பு:**—இதை அரைத்து ஜலம் நிறைந்த குடத்தில் கரைத்து வேறொரு பாத்திரத்தில் ஊற்றினால் மிதந்து கொண்டிருக்கும் சன்னப் பொடிகள் அடியில் படியும். அதை எடுத்து உலர்த்திக் கொள்ள சுத்தியாகும்

**நேர் வாளம்:**—நேர்வாளக் கொட்டைகளை உடைத்து

மேல் தோலை நீக்கி உள்ளிருக்கும் பருப்பை எடுத்து ஒரு மண் பாத்திரத்தில் எருமை சாணத்தை கரைத்து அதில் ஷை பருப்பை ஒரு நாள் ஊற வைத்து பிறகு ஷை மண் பாத்திரத்தோடு அடுப்பில் வைத்து ஜலம் போதுமானது விட்டு ஒரு மணி நேரம் கொதிக்க வைத்து எடுத்து ஷை பருப்புகளை மத்தியில் கத்தியால் பிளந்து ஒட்டியிருக்கும் நஞ்சை நீக்கி வைத்துக் கொள்ளவும். பிறகு புழுங்கலரிசி 1/16 படி எடுத்து போதுமானஜலம் விட்டுஅதில்ஷை நஞ்சு நீக்கிய பருப்புகளை போட்டு ஒருமண் கலயத்தில் ஒரு மணி நேரம் கொதிக்க வைத்து பிறகு ஷை பருப்புகளை 1/2மணி நேரம் பசும் பாலில் கொதிக்க வைத்து எடுத்து கடைசியாக ஒரு ஆலைக்கரண்டியில் கொஞ்சம் விளக்கெண்ணெய் விட்டு ஷை பருப்புகளைப் போட்டு கருகாமல் வதக்கி எடுத்துக் கொண்டால் நல்ல சுத்தியாகும்.

**வெடி உப்பு:—**2பவுண்டு உப்பை 1 பைன்ட் வாழப்பட்டை நீரில் கரைத்து காய்ச்சி எடுத்துக்கொண்டு குளிர்ந்த ஜலத்தில் அலம்பி பிறகு அடுப்பில் வைத்து உலர்த்தி எடுக்க சுத்தியாகும்.

**கற்பூரம்:—**ஒரு பீங்கான் டம்ளரின் வாயை பட்டு துணியால் கட்டி அதில் ஈர கற்பூரம் பொடி செய்து போட்டு அதன் மேல் தாம்பிரத் தட்டில் நெருப்பை போட்டு வைத்து புகையை வெளியில் போகாமல் செய்ய கற்பூரம் உருகி பீங்கானில் விழும் இவ்விதம் 2 தடவை செய்யவும்.

**நவக்ஷாரம்:—**நவக்ஷாரத்தை கொதிக்கின்ற வென்னீரில் கரைத்து வடிகட்டிகுளிர வைத்துப்பிறகு ஒரு அகலமான பாத்திரத்தில் ஊற்றி வெய்யிலில் வைத்தால் உப்பு கட்டும் அதை எடுத்துக் கொள்ளவும்.

## பலவகைப்பட்ட மருந்துகள்—வெள்ளைக்கு

பரங்கிப்பட்டை 1/2 பலம் வெள்ளை குங்கில்யம் 1/2 பலம் அதிமதுரம் 1/2 பலம் இவைகளைத் தனி தனியாக தூள் செய்து பூரா சர்க்கரை 1 பலம் சேர்த்து பசு நெய்யில் காலை மாலை ஒரு கொட்டைப் பாக்களவு சாப்பிட குணமாகும் உப்பில்லா பத்தியம் நாட்பட்ட நோயுக்கு 1/2 மண்டலம் சாப்பிட.

**முதல் பாகம் முற்றிற்று.**

உ

கடவுள் துணை

# ஸ்ரீ ஷண்முக பிரிய ஜெயராம-தீபிகை

என்னும்

# மாந்திரீக-ரத்தினம்

## இரண்டாவது பாகம்

1 நெ—சக்கரம்

என் குரு உபதேசப்படி போடப்பட்டது.



ஓம்—ஸ்ரீயும்—ஹிறீயும்—ஐயும்—

கிலியும்—ஔவும்—சௌவும்

சரஹணபவ

இந்த மந்திரத்தை சூரியன் அல்லது சந்திர கிரஹண காலத்தில், ஜலத்தில் நின்று கொண்டு வடக்கு அல்லது கிழக்கு முகம் நோக்கி கண்களை மூடிக் கொண்டு அவசரமில்லாமலும் மெதுவாகவும், மனதை வேறு வழிகளில் செலுத்தாமலும், வாயால்வெளியில் சொல்லாமலும் மனதுக்குள் ஷை மந்திரத்தை தடவை 1 க்கு 108 ஆக 3 தரம் (108 × 3 = 324) ஜெபித்தால் சித்தியாகும்-ஜெபம் குறைந்தால் சித்தியாகாது. மறுபடியும் முன்போல் ஜபிக்க வேண்டும்.

ஜெபிக்க, ஜெபிக்க சக்தி அதிகமாகும். சாதாரண காலங்களில் மான்தோல் தருப்பை ஆசனத்தில் லட்சமுறை ஜெபிக்க சித்தியாகும். வருஷத்துக்கு 1 அல்லது 2 தடவை கிரஹண காலத்தில் முன் போல் ஜெபிக்க வேண்டும். ஜெபிக்கா விட்டால் சக்தி குறைந்து கொண்டே வரும்— ஜெபித்தால் விரோதிகள் நாசம்-வியாதி வனுக்காது-வெற்றி பக்தி—சாதுக்கள் கடாட்சம் யாத்திரை முதலியன சாதகமாகும்.

ஷை மந்திரம் சித்தியான பிறகு ஷை சக்கரத்தை பொன்—வெள்ளி—அல்லது செப்புத் தகட்டில் எழுதி-ஒரு தாம்பாளத்தில் விபூதி போட்டு அதிலும் ஷை சக்கரத்தை எழுதி ஷை தகட்டையும் அதில் வைத்து வடக்கு அல்லது கிழக்கு முகமாக தருப்பை ஆசனத்தில் உட்கார்ந்து, தூப தீப, நைவேத்தியம் வைத்து நாள் 1 க்கு 108 தரம் ஒரு வாரம் ஜெபித்து ஷை தகட்டை தாயித்தில்போட்டு அணிய வேண்டும் 108 தரம் ஜெபிக்கும் வரையில் கற்பூரம் அணையக் கூடாது. அணைந்தால் சக்தி குறையும்.

ஷை தாயித்தை அணிவதால் பேய்-பிசாசு விலகும் சகலசித்தி-சம்பத்து பெருகும்—விரோதிகள் நாஸ்தி. தாயித்து அணிபவர்கள் இம் மந்திரத்தை வாரம் ஒரு

முறை செவ்வாய் வெள்ளி — ஞாயிறு முதலிய நாட்களில் 108 தடவை ஜெபித்து தூப தீபம் போட்டால் மிக நன்று ஷை விபூதியை தீட்டுப்படாமலும் தரையில் வைக்காமலும் ஒரு டப்பியில் போட்டு வைக்கவும். சகல நோய்களுக்கும் ஜலத்தில் போட்டு கொடுக்கலாம். வாய்பிதற்றல், துர்சொற்பனங்களுக்கு முந்தாணியில் முடியவும்—மாடு ஆடு நோய்களுக்கும் காய்க்காத மரம் செடிகளுக்கும்—சகல திருஷ்டி தோஷங்களுக்கும்—போடலாம்—திருமுருக காற்றுப்படை—சஷ்டிக் கவசம் வாசிப்பது இம் மந்திரத்துக்கு நன்று

## 2 நெ—சக்கரம்

# பஞ்சாட்சர மந்திரம்

| | | | | |
|---|---|---|---|---|
| சி | வ | ய | ந | ம |
| வ | ய | ந | ம | சி |
| ய | ந | ம | சி | வ |
| ந | ம | சி | வ | ய |
| ம | சி | வ | ய | ந |

சகல திருஷ்டி தோஷங்களுக்கும் 1 நெ சக்கரத்தில் கண்டபடி உருபோட்டு தாம்பாளத்தில் விபூதிபோட்டு ஷை சக்கரத்தை அதில் எழுதி ஜெபிக்க வேண்டும் ஜெபிக்கும்

வரையில் கற்பூரம் அணியக் கூடாது. 1 லெ சக்கர விபரப் படி தாயித்து அணிய வேண்டும்.

## தேள் மந்திரம்

1) ஓம்—பசுத்தேளே—பவழத்தேளே—பழகிய வாயில் கொட்டியத் தேளே — ஐங்கடல் — அருகடல் — எழுகடல் நாக்கடலுக் கப்பாலே கொட்டியத் தேள் — குடைச்சல் நான்—நினைத்தவர் மனதில் கொட்டின வாயில் — சில்லென குளிர்ந்து போக—சுவாஹா நசி—நசி—மசி—மசி

## தேள் மந்திரம்—வேறு விதம்

2) ஓம் ஊருக்கு மேலண்டை—இரண்டு, சந்து பனையிலே—உடும்பேர—தேள் இழிய—சங்குருள—சக்கரம்உருள—அங்கம் உருள—ஆகாசம் உருள இறங்கு—இறங்கு சுவாஹா 1 லெ சக்கரத்தில் கண்டபடி இந்த தேள் மந்திரத்தை உரு போட்டு சித்தியான பிறகு கடிவாயில் விபூதி போட்டு பிரம்பால் அல்லது பெருக்காத 3 புது துடப்பக் குச்சுகளால் தடவை 1 க்கு 9 விதம் 3 தடவை மேலிருந்து கீழே இறக்கி மந்திரிக்க வேண்டும். ஒரு தரம் மந்திரித்த பிறகு கொட்டின அவயவத்தை உதர வேண்டும். வடக்கு முகம் பார்த்து மந்திரிக்கவும். மந்திரிக்கும் போது விஷம் இறங்கி வருவது தேள் கொட்டப் பட்டவர்களுக்கு நன்ருகத்தெரியும். சரியாய் உரு போடாதவர்கள் மந்திரித்தால் விஷம் இறங்காது.

## (1) சுளுக்கு மந்திரம்

ஓம்—உடம்பு சுளுக்கு—உட மாந்தை பக்கச் சுளுக்கு—பதினெட்டு குட்டும்—ஓடிவா—பைரவி எங்களாத்து—பிள்ளையார் தன்னுணை—இறங்கு—சுவாஹா

## (2) சுளுக்கு மந்திரம் வேறு விதம்

ஓம்—சினிக்க சீன்கர—சினிக்க பான்கர—குரு போஜ கிர—போஜ போஜாகிர—

(வலது கை சுளுக்கினுல் இடது கையில் மந்திரிக்க)

1 நெ சக்கரத்தில் கண்டபடி உருபோட்டு தேள் மந்திரப்படி சுளுக்கின இடத்தில் விபூதி போட்டு 3வேளை அல்லது 3நாள் காலைமாலை மந்திரிக்க சுளுக்கு குணமாகும்- இரத்தம் கரைய, சுளுக்கின இடத்தில் நல்லெண்ணெய் தடவி வெந்நீர் விடவும்.

## தோஷம் தாங்கின குழந்தைகளுக்கு முந்தாணி அடிக்கும் மந்திரம்

ஓம்—சவ்வும்—கிலியும்—சங்கர வீ ர ா—ஓம்பட்டு—அம் பட்டு—சுவாஹா-

1 நெ சக்கரத்தில் கண்டபடி உரு போட்டு தேள் மந்திரத்தில் கண்டபடி ஒரு பட்டு அல்லது நூல் குட்டையால் தோஷம் தாங்கிய குழந்தைகளுக்கு 3 நாள் காலை மாலை ஷை மந்திரத்தை ஜெபித்துக் கொண்டே முந்தாணி அடிக்க வேண்டும். பிறகு "தரை விளான் இலை" கொஞ்சம் மஞ்சத்தூள், நெல் வைத்து அரைத்து தோஷம் தாங்கிய குழந்தையின் உச்சியில் தடவி வெந்நீர் ஸ்நானம் செய்து வைக்க, சகல தோஷங்களும் குணமாகும்.

## சுக பிரசவமாக—எண்ணெய் மந்திரித்தல்

ஓம்—காடு வெட்டி—எள் விரைக்கபூ-தம் சேர்க்க—கபிலி முகம் - ஏரு முகமாக - நாகம-கவு-ராகம் ஆதி நாராயணன் - ஆடும் எண்ணெய் - அவ்வெண்ணெயைக் கொண்டு-கூட்டிக் குழப்பி-அரையில் தடவவும்—அங்கம் திரும்ப—அரை திரும்ப—கும்பம் திரும்ப-கோடைமதிலும் திரும்ப- தாப்பாள்—திறந்தாப் போல—தாய்- வேறு-பிள்ளை வேறு-அவ்வேறு—இவ்வேராகப் போக சுவாஹா.

1 நெ சக்கரத்தில் கண்டபடி ஷை மந்திரத்தை உரு போட்டுஜெபித்து ஒரு கிண்ணத்தில் ஆமணக்கெண்ணெய் ஊற்றி அதில் அருகம்புல் முடிச்சியால் ஷை மந்திரத்தை

27 தரம் மனதுக்குள் சொல்லி மந்திரித்து கர்ப்பஸ்திரீயின் இடுப்பு—உச்சி—குழந்தையின் சிரசு இவைகளில் அடிக்கடி தடவும்படி ஒரு சுத்தமான ஸ்திரீயினிடம் கொடுக்கவும். ஷை கிண்ணத்தை தரையில் வைக்கக் கூடாது வைத்தால் மந்திர சக்தி போகும். அலமாரி பெட்டியில் வைக்கவும். 1 நெ சக்கரப்படி 108 தரம் ஜெபித்து விபூதி கொடுக்கவும் சுகப் பிரசவமாகும். புண்ணியா வசனத்தன்று ஸ்ரீ முருகனுக்கு நெய் தீபம் வைத்து அர்ச்சனை செய்யவும்—ஒரு பண்டாரத்துக்கு சாதம் போடவும்.

## விலங்குகளின் புழு—கோமாரிக்கு மந்திரம்

ஓம்—குருவே — நமசிவாயம்—ஓம்—பார்வதி — நமசிவாயம்— ஓம்—பரமசிவனே—நமசிவாயம்

1 நெ சக்கரப்படி உரு போட்டு அதில் சொல்லிய சடாட்சர மந்திரத்தை வலதுகையில் கொஞ்சம் சுத்தமான மண் எடுத்து 9 தடவை ஜெபித்து பிறகு ஷை புழு மந்திரத்தை 27 தரம் ஜெபித்து ஷை மண்ணை 3 தடவை விலங்கின் மேல் போடவும் இவ்விதம் காலை மாலை 3 நாள் போடவும். குணமானவுடன் ஸ்ரீ முருகன் கோயிலுக்கு நெய் தீபம் வைக்கவும்.

## உடற்கட்டு மந்திரம்

ஓம்—அம்—உள் அடி—சிங்கம்—நீங்கும்—மின் கால்—தொடையில்—தொப்பை அம்மன் காவல்—வயிற்றில் — மரவடி பிள்ளையார் காவல்—முதுகில் — மூத்தநைநார் காவல் — தோளில் தோகை அம்மன் காவல்—கழுத்தில்—காளியம்மன் காவல் முகத்தில்—முக்கண்ணர் காவல்—பொடிவில் பிரம்மதேவன் காவல்—சிரசில் —நீலன்—குவலன்—காவல்—ஆதிசேஷன் அடி முடிவில்காவல்—அடிக்க வந்தபேய்களெல்லாம்—நொருக்கிய ஓம்—சுவாஹா—

1 நெ சடாக்ஷர சக்கரத்தில் சொல்லியபடி காலை

மாலை உருபோட்டு ஒரு மண்டலம் ஜெபிக்க மனிதர்களா லும் துஷ்ட தேவதைகளாலும் அபாயம் நேரிடாது- வியாதிகள் வலுக்காது-

## பயந்தது—பேய் பிசாசுகள் சேஷ்டைகளுக்கு வேப்பிலை அடிக்கும்—மந்திரம்

ஓம் - இந்திரன் தந்த வேப்பிலை - இறையவன் தந்த வேப்பிலை - சந்திரன் தந்த வேப்பிலை - சதிர்முகன் தந்த வேப்பிலை காளி தந்த வேப்பிலை-துர்க்கை தந்த வேப்பிலை- இவ்வேப்பிலையைக் கொண்டு நான் அடிக்கும்போது-அம்பு பட்டது-அறிவாள் பட்டது-கொம்பு பட்டது-கொடுவாள் பட்டது-கண்டச் சிலந்தி - கண் சிலந்தி - நாக்குச் சிலந்தி- நரம்புச் சிலந்தி - மூக்குச் சிலந்தி - மூலைச் சிலந்தி - ஆனை மூக்குச் சிலந்தி-குதிரை மூக்குச் சிலந்தி - பக்கப் பிளவை தொண்டை நோவு-கருப்பன்-துங்கருப்பன் - கருங்கரந்தி- செங்கரந்தி-செவ்வாய் - அரையாப்பு - முன் சிலந்தியோடு- விப்பூதி-சூனே-பவுத்திரம்-இது முதலானதெல்லம்- நாத்தி நாற்பத்தெட்டு சிலந்தியும்-வீக்கடித்து-விஷமத்து சீவத்தி செந்நீர்வத்தி-வடுகரவத்தி -நஞ்சி - நஞ்சி-நாசமாய் - இஞ்சி பிஞ்சி-போக-போக-சுவாஹா-

1 நெ சக்கரப்படி உரு போட்டு சித்தியான பிறகு அதில் கண்ட சடாட்சர மந்திரத்தை கையில் விபூதி வைத்துக் கொண்டு 9 தடவை தியானித்து ஒரு வேப்பிலை கொத்துக்கு போட்டு தடவை 1 க்கு 9 வீதம் 3 தடவை ஷை வேப்பிலையை அடிக்கவும். இவ்விதம் காலைமாலை 3நாள் அடிக்கவும். வேப்பிலை அடிக்க ஞாயிறு-செவ்வாய்-வியாழன் நன்று குணமானால் தம்இஷ்ட தேவதைக்கு தீபம் வைத்து கற்பூரம் ஏற்றவும் முற்றிற்று.

பிரபாத் பிரஸ், சுண்ணாம்புபேட்டை, குடியாத்தம்.